பியூரிட்டன்களின் இளவரசன் ஜோன் ஓவன்

ஜெரமி வோக்கர்

முதல் பதிப்பு 2014

கிடைக்குமிடம்:

சீர்திருத்த வெளியீடுகள்
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர்,
அயனாவரம்,
சென்னை 600023.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைப்பேசி: 9445671113
ஈமெயில்: rpchennai23@gmail.com

கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த
மேலதிக தகவல்களுக்கு www.biblelamp.org
வலைப்பூவைப் பார்க்கவும்.

குறிப்பு: இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள
அனைத்துப் படங்களும்
இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

அறிமுகம்

திருச்சபை வரலாற்றில் பதினாறாம் நூற்றாண்டு சீர்திருத்தவாத கால திருச்சபை எழுப்புதலுக்குப் பிறகு பதினேழாம் நூற்றாண்டு பெற்றுத்தந்த பெருமகன்களே பியூரிட்டன் பிதாக்களாவர் (Puritan Fathers). இங்கிலாந்தில் அரச ஆதரவாளராக இருந்து செயல்பட்ட ஆங்கிலேயத் திருச்சபை (Church of England) வேதத்தின் அதிகாரத்தை மட்டும் மதித்து நடக்காமல் அதற்குப் புறம்பான போதனைகளைப் பின்பற்றும்படி வற்புறுத்தியதால் அதனை எதிர்த்து நின்று பெருந்துன்பங்களுக்கு முகம் கொடுத்தவர்களே பியூரிட்டன் பிதாக்கள். திருச்சபையைத் தூய்மையாக வேத அடிப்படையில் மட்டுமே நடத்தவேண்டும் என்று இவர்கள் வலியுறுத்தி வாழ்ந்துகாட்டிப் போதனை செய்ததால் பியூரிட்டன்கள் (தூய்மைவாதிகள்) என்ற பெயரில் மற்றவர்களால் அழைக்கப்பட்டனர். ஆங்கிலேயத் திருச்சபை ஒரு ஜெப நூலை வெளியிட்டு அதிலிருப்பவைகளை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தியதால் அதை எதிர்த்த பியூரிட்டன்களும் ஏனையோரும் ஒத்துழையாவாதிகள் (Non-conformist) என்ற பெயரிலும் அழைக்கப்பட்டனர். ஜெபநூலைப் பின்பற்றி ஆங்கிலேயத் திருச்சபையின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட மறுத்ததால் இவர்கள் மீது அரசினதும் ஆங்கிலேயத் திருச்சபையினதும் கொடுமைகள் அதிகரித்து 2000க்கும் அதிகமான போதகர்கள் ஆங்கிலேயத் திருச்சபையில் இருந்து நீக்கப்பட்டதுடன் அநேகமானோர் நாட்டிலிருந்தும் வெளியேற்றப் பட்டனர். இன்னும் அதிகமானவர்கள் உயிரிழக்கவும் நேரிட்டது. இதெல்லாம் வேதத்தை விசுவாசித்துப் பின்பற்றியதற்கு அவர்கள் கொடுத்த விலை.

இந்தப் பியூரிட்டன்களின் காலப்பகுதியில் வாழ்ந்து கர்த்தருக்குப் பணியாற்றி திருச்சபையை அலங்கரித்த பெருமகனே ஜோன் ஓவன்.

அவர் மகா ஞானி. இறையியலறிஞர்களுக்கெல்லாம் மேலான அறிஞர். எழுத்தில் சிறந்தவர். தலைசிறந்த, எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கக்கூடிய வேதப் பொக்கிஷங்களை எழுத்தில் நமக்குத் தந்தவர். அவையெல்லாம் ஆங்கிலத்தில் இன்றும் பதிப்பில் இருந்து வருகின்றன. அவர் கருணையும், ஆத்தும பாரமும் கொண்ட போதகர். அதையே அவர் தன் ஊழியத்திலெல்லாம் சிறந்ததாகக் கருதினார். பிரசங்கம் செய்வதில் அவருக்கு இணையில்லை. தனக்கென ஒரு தனி முறையைக் கைக்கொண்டு ஆவியில் நிறைந்து அவர் பிரசங்கித்தார். கிராமத்து சபைகளிலிருந்து நாட்டின் பாராளுமன்றம்வரை அவருடைய பிரசங்க சிறப்பின் மேன்மை பரவியிருந்தது. ஒலிவர் குரோம்வெல் அவரைத் தனக்கு சாப்ளினாக விவரமறியாமல் வற்புறுத்தி நியமிக்கவில்லை. இத்தனைக்கும் மத்தியில் ஓவன் மிகவும் தாழ்மையானவர். தன்னைப் பற்றிப் பெருமை பாராட்டிக்கொள்ளாமல் தன் தலைவரான கிறிஸ்துவின் மகிமையை அனைத்திலும் நாடியவர்.

ஜோன் ஓவன் எத்தகைய மனிதர் என்பதையும், அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் சிறப்பையும், ஊழியத்தின் மேன்மையையும் ஆங்கிலத்தில் அவரைப் பற்றி வாசித்திராதவர்களுக்கு வசதியாக இந்த நூலில் விளக்கியிருக்கிறார் ஜெரமி வோக்கர். ஓவன் எழுதிய நூல்களின் தலைப்புகளை தமிழில் மாற்றாமல் அப்படியே ஆங்கிலத்தில் தந்திருக்கிறோம்.

முதலாவது ஆக்கத்தில் ஜோன் ஓவனுடைய வாழ்க்கையை விளக்கியது மட்டுமல்லாமல் அவரெழுதிய முக்கிய நூலான, 'கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு' (The Death of Death in the Death of Christ) என்ற நூலின் முக்கியத்துவத்தையும் அதன் பயன்பாடுகளையும் இன்னொரு ஆக்கத்தில் இந்நூலில் விளக்கியிருக்கிறார் ஜெரமி வோக்கர். அது பற்றிக் கொஞ்சம் நான் சொல்லத்தான் வேண்டும்.

சீர்திருத்தக் கிறிஸ்தவத்தையும், அதன் பெரும் பிரசங்கிகளையும், இலக்கியங்களையும் சமீபகாலமாகத்தான் தமிழினம் ஆர்வத்தோடு அறிந்து பயின்று வருகின்றது. 16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் திருச்சபை வரலாற்றில் எழுந்த சீர்திருத்தத்திற்குப் பின்பு அதற்கு அடுத்த நூற்றாண்டில் திருச்சபை சீர்திருத்தத்திற்கான தூய்மைவாதிகளின் (பியூரிட்டன்) உழைப்பைப் பற்றி சபை வரலாற்றில் வாசிக்க முடிகிறது. 16ம் நூற்றாண்டில் மார்டின் லூத்தருக்கும், ஜோன் கல்வினுக்கும் பிறகு 17ம் நூற்றாண்டில்

ஜோன் பனியன், ஜோன் ஓவன் போன்றோர் தோன்றி திருச்சபை சீர்திருத்தம் தொடரும்படிப் பார்த்துக் கொண்டனர். சீர்திருத்தவாதிகளும், தூய்மைவாதிகளும் (பியூரிட்டன்) திருச்சபை வரலாற்றில் அழிவற்ற இடத்தைப் பிடித்திருக்கின்றார்கள். இன்று வேதம் நம் கரத்தில் இருப்பதற்கும், கர்த்தரின் திருச்சபை இந்த உலகில் தலைதூக்கி நிற்பதற்கும், வேதபூர்வமான கிருபையின் போதனைகளையும், சீர்திருத்தப் போதனைகளையும் உலகறிந்திருப்பதற்கும் இவர்கள் ஆற்றியுள்ள பணி மகத்தானது.

இவர்களின் பணிகளில் மேலானது, இரத்தினக் கற்களைப்போன்ற விலைமதிப்பில்லாத அநேக கிறிஸ்தவ இலக்கியங்களை எழுத்தில் வடித்து நமக்களித்துச் சென்றிருப்பதுதான். இவையனைத்தும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. சிறந்த கல்விமானான ஜோன் ஓவன் விலைமதிப்பற்ற பல முத்துக்களை நமக்களித்துச் சென்றிருக்கிறார். அவருடைய எழுத்துக்கள் அனைத்தும் பதினேழு வால்யூம்களாக இன்றும் பதிப்பில் இருந்து வருகின்றன. அவற்றில் ஒன்றுதான், அவர் எழுதிய "கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்" (The Death of Death in the Death of Christ) என்ற நூலாகும். இந்நூலுக்கு ஜிம் பெக்கர் (Jim Packer) என்ற தற்கால இறையியல் அறிஞர் ஆங்கிலத்தில் ஓர் அருமையான முன்னுரையை இருபத்தி ஐந்து பக்கங்களில் வழங்கியிருக்கிறார். ஆய்வு செய்து நீண்டதொரு முன்னுரை வழங்க வேண்டிய அளவுக்கு ஜோன் ஓவனின் வேத ஆய்வுத் திறமை இந்நூலில் அமைந்திருந்தது.

ஜோன் ஓவனின் இந்நூல் "கிறிஸ்து யாருக்காக மரித்தார்?" என்ற வினாவுக்கு பதிலளிக்கிறது. இந்நூலில், கிறிஸ்து உலகில் பிறந்த, பிறந்திருக்கும், பிறக்கப் போகும் அனைவருக்குமாகவும் சிலுவையில் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுக்கவில்லை என்பதை வேதவசனங்களின் அடிப்படையில் நிலைநாட்டி, கிறிஸ்து தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட குறிப்பிட்ட மக்களுக்காக மட்டுமே கல்வாரி சிலுவையில் மரித்தார் என்பதை வேதம் முழுவதிலும் இருந்து படிப்படியாக விளக்கி, சாட்சிகளுக்கு மேல் சாட்சியாக வேத வசனங்களை வாரி வழங்கி ஒரு மிகச்சிறந்த வக்கீலைப் போல வாதாடியிருக்கிறார் ஓவன். ஓவனின் வாதத்திறமையையும், வேத அறிவையும் நாம் இதில் கவனிக்க முடிகின்றது. அதையெல்லாம்விட உலக ஞானத்தின் அடிப்படையில் தனது போதனைகளுக்கு விளக்கந்தராமலும்,

தனது சொந்த எண்ணங்களுக்கு இடங்கொடுக்காமலும் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை வேதவசனங்களாக அள்ளி வழங்கி போதனைகளை விளக்கியிருப்பதே ஓவனின் நூலின் மதிப்பை உயர்த்துகின்றது.

"ஜோன் பனியனின் சரீரத்தில் ஊசியால் எங்கு குத்தினாலும் வேத இரத்தம் சிந்தும்" என்று ஸ்பர்ஜன் அவருடைய வேத ஞானத்தைக் குறித்து சொல்லியிருக்கிறார். பனியனின் காலத்தைச் சேர்ந்த ஜோன் ஓவன் பனியனுக்கு எந்தவிதத்திலும் சளைத்தவரல்ல என்பதை அவருடைய நூல் காட்டுகின்றது. வேத போதனைகளைத் தருகிறோம் என்ற பெயரில் வேதத்தில் இருந்து ஒன்றையும் நிலைநாட்டக்கூடிய அறிவோ, திறமையோ இல்லாது எதையெதையோ பேசிக்கொண்டிருக்கும் தமிழின சபைப் போதகர்கள் பெருகி மலிந்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் வேத போதனைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக அமைந்திருக்கிறது ஜோன் ஓவனின் நூல். ஓவனைப் போலவே சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன்களும் இறை போதனைகளை வழங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு சத்தியத்தையும் நிலைநிறுத்த அளவற்ற வேத வசனங்களை அள்ளி வழங்கி, ஒவ்வொன்றையும் வேதத்தில் அவை அமைந்திருக்கும் சந்தர்ப்பத்திற்கேற்ப விளக்கி ஆணித்தரமான வாதங்களை நம்முன் வைத்திருக்கின்றனர்.


கிறிஸ்து சகல மனிதர்களையும் இரட்சிப்பதற்காக மரித்தார் என்று சொல்லும் உலகளாவிய பரிகாரப்பலிக் கோட்பாட்டையும் (Universal Atonement), கிறிஸ்துவின் மரணபலியின் பலன்கள் கிறிஸ்துவுக்காகத் 'தீர்மானம்' எடுப்பவர்களுக்கு மட்டுமே பலனளிக்கும் என்ற ஆர்மீனியனிசப் போதனையையும் தோலுரித்துக்காட்டி, வேதபோதனைகளின் அடிப்படையில் அவற்றை நிராகரிப்பதோடு, கிறிஸ்து தெரிந்துகொள்ளப் பட்டவர்களுக்காக மட்டுமே மரித்தார் என்ற போதனையை ஆணித்தரமாகத் தன் நூலில் விளக்கியிருக்கிறார் ஓவன். போதகர் ஜெரமி வோக்கர் ஆங்கிலத்திலிருக்கும் இந்நூலின் விசேட அம்சங்களை விளக்கி ஓவனின் போதனைகளின் சுருக்கத்தையும் நமக்களித்திருக்கிறார். அவற்றை இந்நூலில் நான் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறேன். கிறிஸ்துவின் சிலுவைத் தியாகத்தின் பலன்களைப் பற்றிய மேலான வேத அறிவைப் பெற்றுக்கொள்ள இவ்வாக்கம் உங்களுக்கு உதவும் என்று நம்புகிறேன். மேலெழுந்த வாரியாக வாசிக்காமல் இந்த ஆக்கத்தை

நீங்கள் ஒரு தடவைக்கு மேலாக சிந்தித்து வாசித்தீர்களானால் ஜோன் ஓவனின் போதனைகளைப் புரிந்துகொள்வது எளிதாக இருக்கும். கர்த்தரை விசுவாசிப்பதற்கான வல்லமை ஆத்துமாக்களின் கரத்திலேயே இருக்கிறது என்ற தவறான எண்ணத்தின் அடிப்படையில் நடந்துவரும் தமிழினத்தின் பெரும்பாலான சுவிசேஷ ஊழியங்கள் எந்தளவுக்கு வேதத்திற்கு புறம்பானது என்பதை ஜோன் ஓவன் சந்தேகத்திற்கிடமில்லாமல் தன் நூலில் விளக்கியிருக்கிறார்.

இந்நூல், ஓவனின் சிறப்பை நீங்கள் அறிந்துகொண்டு அவருக்காக கர்த்தருக்கு நன்றி சொல்லவும், தொடர்ந்து அவர் எழுதியவற்றை வாசிக்கவும் உங்களைத் தூண்டுமானால் அதுவே இதற்குக் கிடைத்த சிறப்பாக இருக்கும். அதையும்விட ஓவன் விசுவாசித்த தேவனை நீங்கள் விசுவாசித்து, அவர் ஆத்மார்த்தமாகப் பின்பற்றிய சத்தியங்களுக்காக வாழவும், துன்பங்களைத் தாங்கவும், உழைக்கவும், ஏன் உயிரையும்கூடக் கொடுக்க உங்களைத் தூண்டுமானால் அதைவிடப் பெரிதாக எதையும் இந்த நூலின் மூலம் நாம் எதிர்பார்க்க முடியாது.

இந்நூலில் வந்திருக்கும் ஆக்கங்கள் ஏற்கனவே திருமறைத் தீபத்தில் வெளிவந்தவை. இவற்றை நூல்வடிவில் சீர்திருத்த வெளியீடுகள் முதல் தடவையாக தமிழகத்தில் வெளியிட்டிருக்கிறது. அவர்களுக்கு என் நன்றிகள்.

ஆர். பாலா
ஆக்லாந்து, நியூசிலாந்து



ஜோன் ஓவன் (கி.பி. 1616 - 1683)

ஜோன் ஓவன்
(John Owen)

ஒரு கிறிஸ்தவன் எப்படி வாழ வேண்டும் என்று தன்னுடைய வாழ்க்கையின் மூலம் உதாரணமாக விளங்கிய ஜோன் ஓவன் நம்முடைய கவனத்திற்கு உரியவர். அநேக விதங்களில் அவர் தான் வாழ்ந்த காலத்துக்கு மிகவும் தேவையான மனிதராக இருந்தாலும் வேறு சில விதங்களில் தன் காலத்தையும் மிஞ்சிய மனிதராக இருந்தார். இருந்தபோதும் கிருபையின் கனிகளாக அவர் கொண்டிருந்த அநேக குணாதிசயங்களும், வாழ்க்கையில் பயன்படுத்திய விதிமுறைகளும் எக்காலத்துக்கும் உரியவை. நேர்மையானவராகவும், உழைப்பாளியாகவும், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து காட்டிய சிறந்த கிறிஸ்தவ மனிதர் என்ற முறையில் ஓவன் நம்முடைய கவனத்திற்கு உரியவராகிறார்.

ஒரு சிறந்த இறையியல் அறிஞர் என்ற முறையிலும் ஓவன் நம் கவனத்துக்குரியவராகிறார். விண்மண்டலத்தில் பளீரெனக் கண்சிமிட்டிக் காட்சியளிக்கும் அநேக நட்சத்திரங்களுக்கு மத்தியில் ஜொலிக்கும் நட்சத்திரங்களில் ஒன்றாக ஜோன் ஓவன் விளங்குகிறார். ஒரு சில விஷயங்களில் சம காலத்து அறிஞர்கள் அவரைவிட சிறப்பானவர்களாக இருந்திருந்தாலும், கர்த்தரின் வேதத்தில் அவர் கொண்டிருந்த ஆழமான அறிவு, இணக்கமான ஈடுபாடு என்பவற்றைப் பொறுத்த வரையில் அவர் காலத்தில் அவருக்கு இணையானவர்கள் இருக்கவில்லை.

அழிவில்லாத படைப்புகளைத் தந்த படைப்பாளி என்ற அடிப்படையிலும் ஓவன் நம் கவனத்துக்குரியவராகிறார். ஆங்கிலம் பேசப்படும் தேசங்களில் அநேக சீர்திருத்த கிறிஸ்தவர்கள் ஓவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

பெரும்பாலானவர்கள் அவருடைய நூல்களில் ஒன்றையாவது வைத்திருப்பார்கள். ஆனால், அவருடைய நூல்கள் பல இடங்களில் வாசிக்கப்படாது தூசி படர்ந்து காணப்படுகின்றன. சம காலத்து மக்களுக்கு அக்கறையெடுத்து பெரிய நூல்களை வாசிக்கப் பொறுமையில்லை; கவனத்தோடு ஆராய்ந்து படிப்பதில் அக்கறையில்லை; விடாமுயற்சியோடு பல பக்கங்களை வாசிக்கவும் அவர்களுக்கு மனதில்லை. ஓவனின் எழுத்துக்களும், நூல்களும் ஒரு பெரும் சிக்கலான பழத்தோட்டத்தைப் போன்றவை. அவற்றில் பழ அறுவடை செய்வதென்பது இலகுவான காரியமல்ல. ஒவ்வொரு மரத்திலும் தொகையான பழங்கள் இருக்கின்றன. ஓவனின் நூல்களில் பல ஆங்கிலத்தில் பல்வேறு பதிப்புகளில் வாசகர்களின் வாசிப்புத் திறனுக்கும், தேவைக்கும் ஏற்ற முறையில் இலகுவான ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கின்றன. ஓவனின் எழுத்துக்களைப் படிக்க ஆரம்பித்திருப்பவர்கள் மேலும் மேலும் அவருடைய எழுத்துக்களோடு பரிச்சயப்பட்டு அவரை அறிந்துகொள்ளும்படி அவை வசதியளிக்கின்றன. இருந்தபோதும் ஓவனின் எழுத்துக்களில் ஆர்வமும், அவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளும் திறனும் உள்ளவர்கள் அவருடைய ஆக்கங்களை மூலத்தில் வாசிப்பது நன்மை பயக்கும். விஷயமேயில்லாத இக்காலத்தவர்களின் எழுத்துக்களோடு ஒப்பிடும்போது ஓவன் ஆங்காங்கு தந்திருக்கும் சாதாரண குறிப்புக்கள்கூட மிகவும் ஆழமானவையாகவும், சத்தானவையாகவும் இருக்கின்றன.

ஓவனுடைய ஆற்றலையும், பெருமையையும் படம்பிடித்துக் காட்ட முயலும் நான் ஓவனின் எழுத்துக்களில் பாண்டித்தியம் பெற்றவனல்ல. ஓவனுடைய வாழ்க்கையைப் பற்றிய இந்த ஆக்கத்தில் ஓவனைப் பற்றிய புதிய ஆராய்ச்சிகளின் பலன்கள் எதையும் நான் வெளியிடவில்லை; அத்தோடு அவருடைய எழுத்துக்களின் சிறப்பை அறிவிப்பதில் தேர்ந்தவனாகவும் என்னைக் காட்டிக்கொள்ளவில்லை. ஓவனுடைய எழுத்துக்கள் என்னைத் தாழ்மைப்படுத்தி என்னுடைய ஞானக்குறைவையே வெளிப்படுத்து கின்றன. இந்த ஆக்கத்தை எழுதுகிறபோது ஓவனிடமிருந்து கற்றுக்கொள்ளுகிற எண்ணத்தோடேயே அதை ஆரம்பிக்கிறேன். அதுமட்டுமல்லாமல் இந்த ஆக்கம் நீண்டுவிடக்கூடாதென்பதற்காக ஓவனுடைய ஆக்கங்களில் இருந்து ஒரு சில நேரடிக் குறிப்புகளை மட்டுமே இதில் தந்திருக்கிறேன். இந்த ஆக்கம் ஓவனுடைய எழுத்துக்களை நீங்களே நேரடியாக வாங்கி வாசித்து அவை தரும் பெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள உதவட்டும்.

ஆரம்ப காலமும், கிறிஸ்தவ அனுபவமும்

ஜோன் ஓவன் 1615ல் ஹென்றி ஓவனின் (Henry Owen) இரண்டாவது மகனாகப் பிறந்தார். ஹென்றி ஓவன் ஸ்டெட்ஹாம்டனில் (Stadhampton) இருந்த ஆக்ஸ்போர்ட்ஷயர் (Oxfordshire) கிராமத்தில் "ஒத்துழையாவாத" ஆங்கிலிக்கன் குருவாக (Non-conformist Anglican vicar) இருந்தார். (1662ம் ஆண்டில் ஆங்கிலிக்கன் திருச்சபையில் இருந்து அகற்றப்படுவதற்கு முன்பாக ஆங்கிலிக்கன் திருச்சபை பயன்படுத்திய ஜெபநூலில் கொடுக்கப்பட்டிருந்த சில கட்டுப்பாடுகளை ரோமன் கத்தோலிக்க மதப்போதனைகளை சார்ந்ததாகக் கருதி எதிர்த்து நின்ற ஆங்கிலிக்கன் குருமார்களே "ஒத்துழையாவாதிகள்" என்ற பெயரில் அழைக்கப்பட்டனர்.) ஓவனுடைய முன்னோர்கள் பிரிட்டனின் வேல்ஸ் பகுதியைச் சேர்ந்தவர்கள். ஓவனின் தந்தை அவருடைய குடும்பத்தின் பதினைந்து பிள்ளைகளில் இளையவராக இருந்தார். ஓவனின் தாயின் குடும்பக் குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. பிள்ளைப் பருவத்தில் ஆரம்பப்படிப்பை வீட்டில் இருந்தே பெற்றுக்கொண்ட ஓவன் பின்பு எட்வர்ட் சில்வஸ்டர் (Edward Sylvester) என்பவரிடம் ஆக்ஸ்போர்டில் ஒரு சிறப்பு வாய்ந்த தனியார் கல்லூரியில் கல்வி பெறும்படி அனுப்பிவைக்கப்பட்டார்.

ஓவன் சிறுவயதிலேயே கல்வியில் மிகவும் திறமை வாய்ந்தவராக இருந்து தன்னுடைய ஆசிரியர் அதற்கு மேல் கற்றுக் கொடுப்பதற்கு எதுவும் இல்லை என்ற நிலையில் பதினைந்தோ அல்லது பதினேழோ வயதுள்ளவர்களே அனுமதி பெறும் பல்கலைக்கழகத்துக்கு தன்னுடைய பன்னிரெண்டாம் வயதில் சேர்ந்தார். சேர்ந்த நாளில் இருந்தே மிகவும் ஊக்கமாகவும் கடுமையாகவும் படிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்தார். வெகுவிரைவில் நான்கு மணிநேரம் மட்டுமே உறங்குவதற்கு தன்னைப் பழக்கப்படுத்திக்கொண்டார் ஓவன். இந்தப் பழக்கம் சில வருடங்களுக்கு அவருடைய வாழ்வில் தொடர்ந்தது. அதுமட்டுமல்லாமல் படிக்கும் நேரத்தைத் தவிர்ந்த நேரங்களில் இளைப்பாறுவதற்காக சில விளையாட்டுகளையும், உடற்பயிற்சி முறைகளையும் தனக்கு வசதியாக ஏற்படுத்திக் கொண்டார். இசையைக் கற்றுக்கொள்வதிலும் ஓவன் ஈடுபட்டிருந்தார்.

இங்கே ஓவனுடைய வாழ்க்கையில் இருந்து இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். முதலில், இளம் வயதில் தான் இழந்த சரீர நலனைப் பெற்றுக்கொள்வதற்கு தன்னுடைய

கல்வி அனைத்தையும் கொடுக்கத் தயாராக இருப்பதாக ஓவன் பிற்காலத்தில் கூறியிருந்தார். இரவெல்லாம் கண்விழித்துப் படித்தது பிற்காலத்தில் அவரது சரீரத்தைப் பாதித்தது. தான் இந்த விஷயத்தில் தவறிழைத்திருந்ததை ஓவனே உணர்ந்து ஒத்துக் கொண்டிருந்தார். இரண்டாவதாக, பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்தில் மனிதர்களுக்கு முன்பும், சபையிலும் உயர் பதவிகளை அடையும் உலக ஆசை மட்டுமே ஓவனிடத்தில் இருந்தது.

ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தன்னுடைய இறுதிக் காலங்களிலேயே ஓவன் முதன் முறையாக கர்த்தரைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தார். இக்காலத்தில் அவருடைய இருதயத்தில் கர்த்தர் எத்தகைய சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கிரியை செய்ய ஆரம்பித்தார் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. வீட்டில் அவர் பெற்றுக்கொண்டிருந்த ஆரம்பக் கல்வி இதற்கு துணைபோயிருந்திருக்குமா? பக்திமான்களாக இருந்த அவருடைய ஆக்ஸ்போர்ட் ஆசிரியர்களும், விரிவுரையாளர்களும் இதற்குக் காரணமாக இருந்திருப்பார்களா? படித்துக்கொண்டிருந்த காலங்களில் அவர் கற்றுக்கொண்ட சத்தியங்களைப் பரிசுத்த ஆவியானவர் அவருடைய இருதயத்தில் பதிய வைத்து வல்லமையாகக் கிரியை செய்திருப்பாரா? அக்காலத்தில் சபை வாழ்க்கையும், மதவாழ்க்கையும் பொது மக்கள் மத்தியில் முக்கிய இடம் பெற்றிருந்தது. மத, சபை சம்பந்தமான விவாதங்களும், தர்க்கங்களும் அவரைக் கர்த்தரைப் பற்றி சிந்திக்க வைத்திருக்குமா? இல்லாவிட்டால் சமகாலத்து கிறிஸ்தவ ஜாம்பவான்கள் அவரைக் கிறிஸ்துவிடம் அறிமுகப்படுத்தி வைத்திருப்பார்களா?

நாமிருக்கும் இடத்தில் இருந்து கர்த்தர் எந்தவகையில் ஓவனின் இருதயத்தில் செயல்பட்டிருந்திருப்பார் என்பதை விளக்குவது கஷ்டம். 1637ம் ஆண்டில் வில்லியம் லோட் (William Laud) ஆக்ஸ்போர்டில் தலைவராக இருந்த போது ஓவன் ஏற்கனவே கிறிஸ்தவ நம்பிக்கைகளையும், வாழ்க்கை விதிகளையும் தனக்குள் வளர்த்துக் கொண்டிருந்தார். பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்த லோட் ரோமன் கத்தோலிக்க மத வழக்கங்களை அங்கே



வில்லியம் லோட்

அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார். அவற்றைப் பின்பற்ற மறுப்பவர்களைப் பல்கலைக் கழகத்தில் இருந்து நீக்கப் போவதாக பயமுறுத்திக் கொண்டிருந்தார். 1632ல் ஓவன் கலைப் பட்டதாரியாகவும் (Bachelor of Arts) 1635ல் முதுகலைப் பட்டதாரியாகவும் (Master of Arts) அங்கீகரிக்கப்பட்டார். அதே வருடம் அவர் அடுத்த ஏழு வருடங்களுக்கான Bachelor of Divinity பட்டப்படிப்பை ஆரம்பித்தார். ஏற்கனவே அவர் உதவிக்காரராக (Deacon) நியமிக்கப்பட்டிருந்தார். இருந்தபோதும், பல்கலைக்கழகத் தலைவரின் கட்டளைகளை மனச்சாட்சியோடு ஏற்றுக்கொள்ள முடியாததால் தன்னுடைய இருபத்தோராவது வயதில் அவர் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இருந்து விலகினார்.

ஆரம்ப வயதில் வீட்டில் கற்றுக்கொண்ட வாழ்க்கை விதிகளின்படி நடந்து ஓவன் உலக ஆசைகளுக்கு தன் வாழ்க்கையில் இடமில்லை என்பதை இச்செய்கை மூலம் நிரூபித்தார். அதுவரை அவருடைய பல்கலைக்கழகப் படிப்புக்கு உதவி வந்த, செல்வந்தரான வேல்ஸில் இருந்த அவருடைய உறவினருக்கு ஓவனின் செய்கை ஆத்திரத்தை எழுப்பியது. இந்நடவடிக்கை மூலம் சுவிசேஷத்தின் எதிரிகளுக்குத் தன்னை யார் என்பதையும் ஓவன் இனங்காட்டிக் கொண்டார். இதன் மூலம் ஓவன் அதிக இழப்பை விருப்பத்தோடு இருகரம் நீட்டி ஏற்றுக்கொண்டார்.

ஆக்ஸ்போர்ட்ஷயரின் எஸ்கொட் (Ascot) என்ற பகுதியில் வாழ்ந்த சர் ரொபட் டோர்மர் (Sir Robert Dormer) என்பவரின் குடும்ப ஆசிரியராகவும், சாப்ளினாகவும் ஓவன் நியமனமானார். அதன் பிறகு அவர் பேர்க்ஷயர் (Berkshire) கவுன்டியில் வாழ்ந்த ஹர்லியைச் சேர்ந்த லோர்ட் லவ்லேஸ் (Lord Lovelace) என்பவருக்கு சாப்ளினாக சேர்ந்தார். 1642ம் ஆண்டு உள் நாட்டு யுத்தம் ஆரம்பமாகும்வரை இந்த நியமனங்கள் ஓவனுக்கு வாழ்வுதியமளித்தன. அரச குடும்ப ஆதரவாளராக இருந்த லவ்லேஸின் குடும்பத்தை விட்டு விலகி இலண்டனுக்கு பயணமானார் ஓவன். இக்காலத்தில் அரசு ஆதரவாளரும், செல்வந்தராகவும் இருந்த



லோர்ட் லவ்லேஸ்

ஆக்ஸ்போர்டில் படித்தபோது ஓவனுக்குப் பணஉதவி செய்து வந்த உறவினர் ஓவனோடிருந்த தொடர்புகளையெல்லாம் அடியோடு துண்டித்துக்கொண்டார்.

ஆக்ஸ்போர்டில் இருந்த இறுதிக் காலங்களில் ஓவனை ஆத்மீகம் தொடர்பான ஒருவித மனச்சோர்வு பாதித்திருந்தது. அது இறுதிவரை அவரைவிட்டு முற்றாக விலகவில்லை. இதற்கு நோயும், வேலைப்பளுவும்கூட காரணங்களாக இருந்தபோதும் அவருடைய ஆத்துமாவின் நிலையைப் பற்றி அவருக்கு இருந்த ஆதங்கமே இதற்கு முக்கிய காரணம்.

இக்காலத்தில் தன் வாழ்க்கையில் ஓவனுக்கு பூரண சமாதானம் இருக்கவில்லை. அது ஏன் என்பதை நிர்ணயிப்பதும் கடினம். அவருடைய உள்ளத்தில் நிகழ்ந்துகொண்டிருந்த போராட்டங்களை அவரெழுதிய The Forgiveness of Sin, An Exposition of the 130th Psalm ஆகிய நூல்கள் விளக்குவதாக சிலர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதையும்விட மேலாக கர்த்தர் ஒரு மனிதனுக்கு விதித்திருக்கும், அவன் இலக்காகக் கொண்டிருக்கும் பணியில் அவன் பயன்படும்படியாக இத்தகைய உளப் போராட்டங்கள் அம்மனிதனின் குணாதிசயங்களை வரைமுறைப்படுத்தி அமைக்கின்றன என்று சொல்லலாம். இதை மார்டின் லூத்தர், ஸ்பர்ஜன் ஆகியோரிலும் நாம் காணலாம். ஏன், அப்போஸ்தலன் பவுலின் வாழ்க்கையிலும் காணலாம்.

ஒருநாள் அல்டர்மன்பரியில் (Aldermanbury) செயின்ட் மேரி திருச்சபையில் அன்றைய பிரசங்கிகளில் பிரபல்யமானவராக இருந்த டாக்டர் எட்மன்ட் கெலமியின் (Dr. Edmund Calamy) பிரசங்கத்தைக் கேட்பதற்காக ஓவன் சென்றார். டாக்டர் கெலமிக்குப் பதில் முன்பின் தெரியாத ஒரு நபர் பிரசங்க மேடைக்கு பேசுவதற்கு வந்தபோது ஓவனுக்கு சலிப்புத் தட்டியது. தன்னோடு வந்திருந்த நண்பன் இன்னொரு சபைக்கு பிரசங்கம் கேட்கப் போவோம் என்று சொன்னபோது சரீர அசதியின் காரணமாக அதன்படி நடக்க ஓவனுக்கு மனதிருக்கவில்லை. பிரசங்க மேடைக்கு வந்த புதிய பிரசங்கி ஜெபம் செய்த பிறகு தான் பிரசங்கிக்கப் போகும் வசனமாக மத்தேயு 8:26ஐ அறிவித்தார். "அற்ப



எட்மன்ட் கெலமி

விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள்" என்பதே அந்த வசனம். அதைக் கேட்டவுடன் ஓவன் அந்த வசனத்தின் மூலம் தன்னோடு பேசும்படிக் கர்த்தரிடம் உடனேயே ஜெபித்துக் கேட்க ஆரம்பித்தார். பிரசங்கி பிரசங்கத்தில் ஓவனின் சந்தேகங்கள், பயங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாகத் தொட்டு அலச ஆரம்பித்தார். பிரசங்கம் முடிவுற்றபோது ஓவனுக்கு கிறிஸ்துவில் கர்த்தரின் அன்பு பற்றிய புதிய நம்பிக்கையும், கர்த்தரின் நிலைத்திருக்கும் சமாதானமும் கிட்டியது. பின்னால் எத்தனையோ முயற்சிகள் செய்தும் அன்று பிரசங்கித்த அந்தப் பிரசங்கி பற்றிய விபரங்களை ஒருபோதும் ஓவனால் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிற்று. இந்த முறையில் அறிமுகமற்றவர்களைப் பயன்படுத்தி பரலோக ஜீவியத்துக்கு ஆத்துமாக்களை அழைத்துக் கொள்ளும் பணியைக் கர்த்தர் அன்று முதல் தடவையாக செய்யவில்லை. இதே முறையிலேயே பெரல், ஜோன் கல்வின், ஸ்பர்ஜன் போன்றோரையும் கர்த்தர் மனந்திரும்புதலை அடையும்படிச் செய்தார்.

எழுத்துப் பணியும், போதக ஊழியமும்

சரீரத்திலும், மனதிலும், உணர்விலும், ஆத்துமாவிலும் அதுவரை அனுபவித்த போராட்டங்களில் இருந்து விடுபட்டு 1642ம் ஆண்டு ஆரம்பத்தில் எழுத்துலகில் பாதம் பதித்து நடக்க ஆரம்பித்தார் ஓவன். அவ்வருடமே The Display of Arminianism என்ற அவருடைய நூல் வெளியானது. அதில் தான் கல்வி பயின்றபோது ஆக்ஸ்போர்டில் தலைவராக இருந்த ஆர்ச்பிஷப் லோடின் ரோமன் கத்தோலிக்க, ஆர்மீனிய, பெலேஜியனிசப் போதனைகளைத் தோலுரித்துக் காட்டியிருந்தார் ஓவன். ஓவனின் முதல் நூலில் குறைகளில்லாமல் இருக்கவில்லை. அது வாசிப்பதற்கு இலகுவானதாக இல்லாமலிருந்தாலும் முற்றும் வேதபோதனைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது.

அதன்பிறகு ஓவன் எஸ்செக்ஸில் (Essex) இருந்த போர்ட்ஹாம் (Fordham) என்ற இடத்தில் சிறிய சபைக்கு போதகராக நியமிக்கப்பட்டதற்கு இந்த நூலும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அதே வருடம் ஓவன் மேரி ரூக் (Mary Rooke) என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இந்தத் திருமணத்தின் மூலம் அவர்களுக்கு அமைதியான தாம்பத்திய வாழ்க்கை அமைந்ததோடு, பதினொரு குழந்தைகளும்

பிறந்திருந்தன என்பதைத் தவிர வேறு விபரங்களை அறிய முடியவில்லை. அந்தக் குழந்தைகளில் ஒரு பெண் குழந்தை மட்டுமே வாலிப வயதை அடைந்தது. அந்தப் பெண்ணும் திருமணத்திற்குப் பிறகு தாம்பத்திய வாழ்க்கையில் அமைதியின்றி வாலிப வயதிலேயே மரிக்க நேர்ந்தது.

ஓவனின் போதக ஊழிய முறை பியூரிட்டன்களுக்கே உரித்தான போதனை முறையை ஒத்து அமைந்திருந்தது: வீடு வீடாகப் போய் வினா விடைப் போதனையளிப்பதும், சத்துள்ள பிரசங்கங்களை அளிப்பதையுமே ஓவன் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

1643ல் ஓவன் The Duties of Pastor and People Distinguished என்ற நூலையும் இரண்டு சிறு வினாவிடைப் போதனை நூல்களையும் வெளியிட்டார். இவற்றின் மூலம் சமூகத்தின் சகல பகுதியினரோடும் அறிவுபூர்வமாக தொடர்புகொள்ளும் ஓவனின் திறமை வெளிப்பட்டது. நல்ல படிப்பாளியான ஒருவரால் இலகுவாக மக்களைக் குழப்பிவிட முடியும். அதைவிட கடுமையானது தன்னுடைய பேச்சைக் கேட்கும் சமூகத்தின் சகல பகுதியினரும் அதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளச் செய்வது. தான் எழுதியவற்றை வாசிக்கும் மக்களை அடைய ஓவன் தனக்கேயுரிய சிறப்பான எழுத்து நடையைக் கையாண்டார்.


ஓவனின் மதிப்பு சிறிது சிறிதாக வளர ஆரம்பித்து அவருக்கு முப்பத்தி இரண்டு வயதாயிருக்கும்போது 1646ம் ஆண்டு 29ம் நாள், மாத உபவாசத்தின்போது அவருக்கு பாராளுமன்றத்தில் பிரசங்கமளிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அன்று அப்போஸ்தலர் 16:9ம் வசனத்தில் இருந்து அவர் பிரசங்கமளித்தார். அன்று அவரளித்த பிரசங்கம் அவருக்கிருந்த பிரசங்கத் திறமையை வெளிப்படுத்தியது. கிறிஸ்தவ போதனைகளைப் பெற்றுக்கொண்டிராத நாட்டின் பகுதிகளுக்குச் சென்று அத்தகைய போதனைகளை அளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியபோது அவருடைய பேச்சில் சுவிசேஷ வைராக்கியம் வெளிப்பட்டது.

இதற்குப்பிறகு போர்ட்ஹாமில் அவருடைய பணி ஒரு முடிவுக்கு வந்தது. ஆங்கிலிக்கன் திருச்சபை பின்பற்றி வந்த போதக நியமிப்பு வழிமுறைக்கு அவர் பலியானார். உடனடியாகவே அவருக்கு கொகெஷெல் (Coggeshall) என்ற இடத்திலிருந்து அழைப்பு வந்தது. அங்கிருந்த சபையை அதுவரை விசுவாசமிக்க

ஊழியர்கள் கவனித்து வந்திருந்தனர். அங்கே ஓவன் நல்ல அத்திவாரத்தோடு தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்தார். சபை 2000 பேருடைய விசுவாசமுள்ளவர்களைக் கொண்டு வளர்ந்தது.

கொக்கஸ்ஹோலிலிருந்த இந்தக் காலப்பகுதியில் ஓவன் திருச்சபை அமைப்பைப் பொறுத்த இறையியல் நம்பிக்கையில் சபை வேத அடிப்படையில் தன்னைத் தானே ஆளும் அமைப்பில் நம்பிக்கை கொண்டார். இதைக் கொங்கிரிகேஷனல் (Congregational) அல்லது இன்டிபென்டன்ட் (Independent) சபை அமைப்பு முறை என்று கூறுவார்கள். பிரெஸ்பிடீரியன்களோடு இறையியலைப் பொறுத்தவரையில் அவர் பல போதனைகளில் ஒத்துவந்தபோதும் சபை நிர்வாக அமைப்பைப் பொறுத்தவரையில் அவர்களோடு அவருக்கு உடன்பாடில்லை. இது பற்றி அதிகம் வாசித்ததோடு ஜோன் கொட்டன் (John Cotton) என்ற கொங்கிரிகேஷனல் சபைக் கோட்பாடுடையவரின் The Keys of the Kingdom of Heaven என்ற நூலை வாசித்தும் ஓவன் இந்த முடிவுக்கு வந்தார். இருந்தாலும் ஓவனின் திருச்சபை அமைப்பு பற்றிய கோட்பாடுகள் கொங்கிரிகேஷனல் சபை அமைப்பை அப்படியே கொண்டிராமல் அதில் மாற்றங்களை ஏற்படுத்தியும் அதை ஒத்து அமைந்ததாகவும் இருந்தன. ஆகவே அவரை 'Modified Congregationalist' என்று கூறலாம். எந்த மனிதனுக்கும் அடிமையாகாது, அதே நேரம் தனித்துவமான சிந்தனைப் போக்கைக் கொண்டிருந்து, வேத சத்தியங்களை மட்டும் நாடி ஆத்மீகப் பாதையொன்றை வகுக்கும் முயற்சியில் ஓவன் ஈடுபட்டார்.

அதே நேரம் நாட்டில் வளர்ந்து கொண்டிருந்த பிரெஸ்பிடீரியன் சபைப் பிரிவினர் ஏனைய சபைப்பிரிவினரை ஏற்று நடந்து கொள்ளாமலிருந்தது அவருக்கு மனத்தாங்கலை ஏற்படுத்தியது. வற்புறுத்தி எதையும் பின்பற்ற வைக்கும் கட்டுப்பாடுகளையும் போலிப் போதனையாளருக்கு கொலைத்தண்டனை விதிப்பதையும் ஓவன் கடுமையாக சாடினார். "போலிப்போதனை கேடானதுதான்,




ஜோன் கொட்டன்

ஆனால், அது ஆத்மீகம் சம்பந்தமானது: ஒரு மனிதனின் தலையைத் துண்டிப்பதால் அதைப் போக்கிவிட முடியாது" என்றார் ஓவன்.

1647ல் அவர் மறுபடியும் ஒரு நூலை வெளியிட்டார். "கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்" (The Death of Death in the Death of Christ) என்ற அந்த நூலில் இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மெய்த்தன்மையையும், அதனால் ஏற்படும் பலாபலன்களையும் தெள்ளத்தெளிவாக ஓவன் விளக்கியிருந்தார். ஏழு வருடங்களுக்கு ஓவன் ஜெபத்தோடு ஆய்வு செய்து, உழைத்துத் தயாரித்த நூல் இது. இந்நூல் இன்னொரு திறமைவாய்ந்த எழுத்தாளரான ரிச்சட் பெக்ஸ்டருடன் (Richard Baxter) ஓவனுக்கு தொடர்பை ஏற்படுத்தி கிறிஸ்துவின் பரிகாரப்பலியைப்பற்றி அவரோடு பல்வேறு விவாதங்களில் ஈடுபட வைத்தது. இந்த நூலில் ஓவனின் சிறந்த சிந்தனைத் திறன் ஒளி வீசியது.

1648ல் ஓவன் Eshcol என்ற நூலை வெளியிட்டார். அந்நூலில் தங்களுக்கு கிறிஸ்துவோடு இருக்கும் உறவின் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டிய கடமைகளைப்பற்றி ஓவன் விளக்கியிருந்தார்.

இதற்குப் பிறகு உள்நாட்டுப் போர் நெருங்கிவர அரசு ஆதரவாளர்கள் (Royalist) கொல்செஷ்டரை (Colchester) சுற்றிப் பாதுகாப்பு அரண்களை ஏற்படுத்தியிருந்தனர். பாராளுமன்ற சார்பாளர்களின் ஜெனரல், கொகெஷெல் என்ற இடத்தை தலைமையகமாகக் கொண்டு நிலைமையை சரிசெய்ய அனுப்பிவைக்கப்பட்டார். இக்காலத்தில் ஓவனுக்கு ஜெனரலோடு நல்ல பரிச்சயம் ஏற்பட்டது அவரோடு நல்லுறவேற்படுத்திக் கொண்டார்.



ரிச்சட் பெக்ஸ்டர்

உள்நாட்டுப் போர் ஒரு முடிவுக்கு வர ஆரம்பித்த காலத்தில் ஓவன் பலராலும் போதகராக அங்கீகரிக்கப்பட்டிருந்தார். 1649ம் ஆண்டு வியாழக்கிழமை 31ம் நாள் பாராளுமன்றத்தில் பிரசங்கிக்க

அழைக்கப்பட்டிருந்த இருவரில் ஓவன் ஒருவராக இருந்தார். அதற்கு முதல் நாள்தான் நாட்டு மன்னன் முதலாம் சார்ள்ஸ் கொலை செய்யப்பட்டிருந்தான். இக்காலத்து வாசகர்களுக்கு அன்று நடந்ததை கிரகித்துக் கொள்ளுவது கடினமே. நாட்டின் உயர் பதவிக்கு உரியவன் என்று மக்களால் கருதப்பட்ட அரசன் அந்தப் பதவியை இழந்தது மட்டுமல்லாமல் மக்களால் கொலையும் செய்யப்பட்டிருந்தான். அதுவும் நாட்டுக்கு எதிராக செயல்பட்டான் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கொலை செய்யப்பட்டிருந்தான். பாராளுமன்றம் ஓவனை அன்றைய தினம் பிரசங்கம் செய்யும்படிக் கேட்டுக்கொண்டிருந்ததில் இருந்து அது எந்தளவுக்கு ஓவன் மீது நம்பிக்கை வைத்திருந்தது என்பதை உணர முடிகிறது. ஓவன் அன்று பிரசங்கத்திற்கு எடுத்துக் கொண்டிருந்த வசனம் எரேமியா 15:19-20. பிரசங்கம் Righteous Zeal encouraged by Divine Protection என்பதைக் கருப்பொருளாகக் கொண்டிருந்ததோடு Discourse on Toleration என்ற ஆக்கத்தையும் இணைத்துப் பின்னால் அச்சிடப்பட்டது. ஓவனின் பிரசங்கம் முதலாம் சார்ள்ஸின் மரணத்தைப் பற்றிய எந்தக் குறிப்பையும் கொண்டிருக்கவில்லை. அன்று அதுவே பெரிதாகப் பேசப்பட்ட விஷயமாக இருந்தபோதும் ஓவன் அதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கவில்லை. அதற்காக அவர் அன்று நேர்மையில்லாதவர், முதுகெலும்பற்றவர் என்று கடுமையாக விமர்சிக்கப்பட்டார். ஓவனின் கருத்து என்ன என்பதை அறிந்துகொள்ளும்படி நமக்கு எந்த சாட்சியங்களும் கிடைக்கவில்லை.

ஒலிவர் குரோம்வெலும், ஓவனும்

அதே வருடம் ஏப்ரல் 19ம் நாள் ஓவன் மறுபடியும் பாராளுமன்றத்தில் பிரசங்கம் செய்ய அழைக்கப்பட்டார். அந்நாளில் ஒலிவர் குரோம்வெல் (Oliver Cormwell) பாராளுமன்ற ஆளுநராக இருந்தார். அன்றே ஓவனை முதல் தடவையாக பார்க்கும் வாய்ப்பு குரோம்வெலுக்குக் கிடைத்தது. அடுத்த நாள் இருவரும் சந்தித்துப் பேசிக்கொண்டனர். அந்தச் சந்திப்பின்போது குரோம்வெலுக்கு ஓவனைப் பிடித்திருக்க வேண்டும்; ஏனெனில், தன்னைப் பார்க்க வருகிறவர்கள் தரும் வழமையான தாழ்மையான அறிமுகங்களையெல்லாம் குரோம்வெல் ஓவனிடம் எதிர்பார்க்காமல் தன்னோடு ஓவன் அயர்லாந்து நாட்டுக்கு வரவேண்டும் என்று வலியுறுத்தினார். ஓவனும் அவருடைய சபை மக்களும் அதற்கு


ஒலிவர் குரோம்வெல்

மறுப்புத் தெரிவித்தபோது, குரோம்வெல் அது தன்னுடைய கட்டளை என்று ஓவனுக்கு அறிவித்தார். ஏனைய போதகர்கள் குரோம்வெலின் விருப்பத்தை மறுக்காமல் அவரோடு போகுமாறு ஓவனுக்கு அறிவுரை செய்தபோது கடைசியில் ஓவன் அதற்கு இணங்கி குரோம்வெலோடு போனார்.

1649ல் குரோம்வெலின் படை அயர்லாந்து நாட்டுக்குப் புறப்பட விருந்தது. அதற்கு முதல் நாள் முழுப்படையும் உபவாசத்திலும், ஜெபத்திலும் நாளை செலவிட்டது. அன்று போதகர்கள் பலர் படையின் வெற்றிக்காக கர்த்தரின் ஆசீர்வாதத்தை நாடி ஜெபித்தனர். அதற்குப் பிறகு படையை நடத்திய மூன்று படைத்தலைவர்கள் படையினருக்கு வேதப் பிரசங்கமளித்தனர். பன்னிரெண்டாயிரம் பேரைக் கொண்டிருந்த அந்தப் படை, வழமையாக போர்வீரர்கள் பயன்படுத்தும் கெட்ட வார்த்தைகள், பேச்சுக்கள், நடத்தைகளையெல்லாம் உதறிவிட்டு வேதத்தை வாசிப்பதிலும், சங்கீதங்கள் பாடுவதிலும், கர்த்தரைப் பற்றி ஒருவரோடொருவர் பேசுவதிலும் நேரத்தை செலவிட்டது.

ஒன்பது மாதங்களுக்குப் பிறகு குரோம்வெல் வெற்றியுடன் அயர்லாந்தில் இருந்து திரும்பினார். அதன் பின் பொதுநலவாயத்து படைகளின் பிரதான படைத்தலைவராக குரோம்வெல் நியமிக்கப் பட்டார். ஓவன் கொகெஷெல்லுக்கு திரும்பியபோதும், குரோம்வெல் ஸ்கொட்லாந்தில் சில பிரச்சனைகளைத் தீர்க்கப் புறப்பட்டபோது அவரோடு போக நேர்ந்தது. பாராளுமன்றம் ஜோசப் கெரலையும் (Joseph Caryl), ஓவனையும் குரோம்வெலின் போதகர்களாகப் பணிபுரியும்படி கேட்டுக்கொண்டது. ஸ்கொட்லாந்தின் எடின்பரோ நகரில் பெரும்பாலான ஸ்கொட்லாந்துப் போதகர்கள் கோட்டைக்கு வெளியில்


ஜோசப் கெரல்

போகமுடியாது அடைபட்டிருந்தபோது ஓவன் செயின்ட் கில்லிஸ் (St. Giles) சபையில் கொடுத்த பிரசங்கங்களைக் கேட்டு அவரிடம் அதிக ஈடுபாடு காட்டினார்கள். ஸ்கொட்லாந்துப் போதகர்கள் ஓய்வு நாளில் கோட்டைக்கு வெளியில் போய் பிரசங்கம் செய்வதற்கு உதவி செய்ய ஓவன் முன்வந்தபோது அந்தப் போதகர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் தன் கடமை முடிந்தபோது ஓவன் மறுபடியும் கொகெஷெல்லில் இருந்த தன்னுடைய அன்பு மக்களிடம் திரும்பி வந்தார். ஆனால், அந்த அமைதி தொடர்ந்து நீளவில்லை.

1651ம் ஆண்டு மார்ச் 18ம் நாள் ஆக்ஸ்போர்டில் இருந்த "கிறிஸ்துவின் சபை" (Christ Church) என்ற கல்லூரியின் தலைவராக (Dean) ஓவனைப் பொறுப்பேற்கும்படி பாராளுமன்றம் பணித்தது. ஆக்ஸ்போர்டில் இருந்த கல்லூரிகள் அனைத்திலும் இதுவே பிரபல்யமானதாக இருந்தது. கல்லூரிக் கூட்டங்களை நடத்துவதும், இறையியல் விரிவுரைகள் அளிப்பதும் இந்தப் பதவியில் ஓவனின் கடமைகளாக இருந்தன. அதற்கு சிறிது காலத்துக்குப் பிறகு 1652ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ம் நாள் குரோம்வெல் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் தலைவராக நியமனம் பெற்றபோது தன்னுடைய துணைத் தலைவராக ஓவனை நியமித்தார். எந்தப் பல்கலைக்கழகத்தில் இருந்து பத்து வருடங்களுக்கு முன் மனச்சாட்சியின் காரணமாக ஓவன் விலக நேர்ந்ததோ அதே பல்கலைக்கழகத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு இப்போது ஓவனின் கைக்கு வந்தது.

இந்தப் பதவிகளெல்லாம் ஓவனுக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை. மாறாக அவர் அன்புகாட்டும் போதகராகவும், ஊன்றிப் படிக்கும் இறையியலறிஞராகவும் இருக்கவே விரும்பினார். ஆக்ஸ்போர்ட் பணி அவருடைய திருச்சபைப் பிரிவின் கோட்பாட்டைப் பிரதிபலிக்கும் சபை அரசியல் பணியாகவே இருந்தது. அத்தோடு பல்கலைக்கழகமும் அக்காலப்பகுதியில் பெரும் பிரச்சனைகளைக் கொண்டதாக இருந்தது. அரசாதரவு காட்டி வந்த பல்கலைக்கழகத்தின் வருமானமெல்லாம் அரசனுக்கு உதவி செய்வதில் கரைந்திருந்தது. பணி செய்தவர்களின் மத்தியில் பெரும் எரிச்சலும், பொறாமையும் கொடிகட்டிப் பறந்ததோடு, தகுதியற்ற மோசமான அநேக மாணவர்களையும் அது உள்ளடக்கியிருந்தது.

பலர் தவறாகப் பியூரிட்டன்களை கடுமையானவர்களாகப்

படம் பிடித்துக் காட்டுவதற்கு எதிர்மாறாக ஓவன் பாராட்டக் கூடிய பண்புள்ள மனிதராக காணப்பட்டார். அவர் வாழ்ந்த வீடு ஒழுங்கோடு இருந்தது, பிரசங்க மேடையில் அவர் அனைவரும் மதிக்கும் வகையில் நடந்து கொண்டார், திறமை வாய்ந்த பேச்சாளராக இருந்தார், வெற்றிகொள்ள வைக்கும் வாதத்திறமையோடு பேச்சாற்றலும் கலந்து, அவருடைய வேறுசில வெளிப்புற வசதிகளும் இணைந்துகொள்ளும்போது எந்தக் கூட்டத்தையும் தான் விரும்புகிற விதத்தில் தன்வசம் கொண்டுவந்துவிடக்கூடிய வல்லமையை ஓவன் கொண்டிருந்தார்.

பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தவர்களையெல்லாம் ஒன்றுகூட்டி அவர் கொடுத்த ஆரம்ப உரையில் அவர் தான் எதற்கும் கிறிஸ்துவிலேயே தங்கியிருப்பதாக விளக்கினார். கிறிஸ்துவில் தங்கியிருக்கும் உறுதியோடு உழைத்தே அவர் தன் பணியில் சிறக்க ஆரம்பித்தார். ஓவன் உண்மையிலேயே மிகவும் பொறுமையானவராகத் தென்பட்டபோதும், திட்டமான ஒழுக்கக் கட்டுப்பாட்டைப் பின்பற்றுபவராக இருந்தார். ஒரு முறை பேச்சில் சகலவித மோசமான வார்த்தைகளையும், வசனங்களையும் தவிர்த்துவிட வேண்டும் என்று தன்னுடைய மாணவன் ஒருவரை அவர் எச்சரித்திருந்தார். ஆனால், பேச ஆரம்பித்தபோது அந்த மாணவன் அதையெல்லாம் உதறிவிட்டுப் பேச ஆரம்பித்தான். அதைக் கவனித்த ஓவன் சக மாணவர்களைப் பார்த்து அவனைத் தடுக்கும்படிக் கூறினார். அப்படியும் அந்த மாணவன் நிறுத்தாமல் போக, பல்கலைக்கழகத்தின் மதிப்பையும், மரியாதையையும் காப்பதற்காக, சக நண்பர்கள் அவருடைய பாதுகாப்பிற்காக அவரைத் தடுத்ததையும் பொருட்படுத்தாமல் எழுந்து தானே அந்த மாணவனின் தோளில் கைவைத்து அவனை இழுத்து பல்கலைக்கழக சிறையதிகாரிகளிடம் ஒப்படைத்தார். அந்த மாணவன் செய்வதறியாது வியப்போடும், பயத்தோடும் திகைத்து நின்றான்.

பல்கலைக்கழகத்தின் ஆத்மீக விருத்திக்காக ஓவன் அயராது உழைத்தார். மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட பிரசங்கங்களில் அவருக்குத் திருப்தியில்லாததால் சக பியூரிட்டன் பிரசங்கியான தொமஸ் குட்வினும் அவருமே மாறி மாறி மாணவர்கள் மத்தியில் ஆக்ஸ்போர்ட் செயின்ட் மேரி சபையில் பிரசங்கங்களை அளித்து வந்தனர். ஓவனின் பிரபல்யமான நூல்களான Mortification, Temptation ஆகியவற்றுக்குக் காரணமான அவருடைய பிரசங்கங்கள்

அனைத்தும் வாலிபர்களான பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலேயே முதன் முதலாகப் பிரசங்கிக்கப்பட்டன.


இக்காலங்களில் ஓவன் பல்வேறு ஊழியங்களில் ஈடுபட்டிருந்தார். பல்கலைக்கழக துணைத்தலைவராக இருந்தபோதும் அப்பணி அவருடைய வேறுபல முயற்சிகளுக்குத் தடையாக இருக்கவில்லை. 1653ம் ஆண்டு ஆகஸ்டு 25ம் நாள் அவர் மறுபடியும் பாராளுமன்றத்தில் பிரசங்கித்தார். அது குரோம்வெலின் படை ஹாலந்துப் படைகளை வென்றதை சிறப்பிக்கும் தருணத்தில் கொடுக்கப்பட்டது. அக்டோபர் மாதத்தில் அவர் குரோம்வெலின் அழைப்பை ஏற்று இலண்டனுக்கு கிறிஸ்தவ ஒற்றுமை குறித்த ஒரு மகாநாட்டில் கலந்துகொள்ளப் போனார். கிறிஸ்தவ ஒற்றுமை குறித்து அன்று அநேகர் அக்கறைகாட்டி வந்தார்கள். இருந்தபோதும் பலரும் பெரிதும் இதற்காக உழைத்தபோதும் அந்த மகாநாட்டின் மூலம் எந்த நன்மையும் ஏற்படவில்லை. அன்று ஓவனும் அவரைச் சார்ந்தவர்களும் எதிர்பார்த்து உழைத்த கிறிஸ்தவ ஒற்றுமை இன்றைய போலித்தனமான சமயசமரச ஒற்றுமையைப் போன்றதாக இருக்கவில்லை. அவர்கள் சத்தியத்தின் அடிப்படையில் வேதம் காட்டும் ஒற்றுமையையே பெரிதும் நாடினார்கள். 1653ம் ஆண்டு டிசம்பர் 23ம் நாள் தொமஸ் குட்வினுக்கும், ஓவனுக்கும் "டாக்டர்" (Doctor of Divinity) பட்டமளிக்கப்பட்டது. இந்த வருடம் ஓவன் தன்னுடைய மிகவும் கடினமான ஒரு நூலை வெளியிட்டார். அது The Claims of Vindicatory Justice Asserted என்ற நூலாகும். பெருந்தகுதிகளைக் கொண்டிருந்த ஓவனுக்கே பெரும் சவாலாக இருந்தது இந்த நூல். 1654ம் ஆண்டு அவர் The Doctrine of the Saint's Perseverance Explained and Confirmed என்ற நூலை வெளியிட்டார். இந்த நூலையும் மக்களுக்காக அவர் எழுதியதால், மக்களால் புரிந்துகொள்ளக் கூடிய மொழிநடையில் எழுதினார். இருந்த போதும் கருப்பொருளிலும், போதனையிலும் அவர் எப்போதும் சத்தியம் தவறாமல் இருக்கும்படிப் பார்த்துக்கொண்டார்.

1653ல் குரோம்வெல் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு 1654ல் புதிய பாராளுமன்றத்தை நியமித்தபோது ஓவன் அதில் அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டார். (புதிய பாராளுமன்றத்தில் ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒருவருக்கு இடமளிக்கப்பட்டது.) ஜோ. ஓவன், எம். பி. தான் எல்லோராலும் மதிக்கப்படும் டாக்டர்

ஜோன் ஓவன் என்பதை அறிந்துகொண்டபோது, சபைப் போதகர்கள் பாராளுமன்றத்தில் பணிபுரியக்கூடாது என்ற வழக்கம் இருக்கிறது என்று யாரோ நினைவுறுத்தியதால் ஓவன் பாராளுமன்ற அங்கத்தவர் பணியில் இருந்து விலகிக்கொண்டார். இருந்தபோதும் ஓவன் Triers என்றழைக்கப்பட்ட கமிஷனில் உறுப்பினராக இருந்தார். இந்தக் கமிஷன் பக்திமான்களாகவும், வேதத் தகுதிகளைக் கொண்டவர்களாகவும் இருந்தவர்கள் மட்டுமே நாட்டில் போதகப் பணிக்கு நியமிக்கப்படும்படிப் பார்த்துக்கொள்ளும் கடமையைக் கொண்டிருந்தது. இக்காலப்பகுதியில் குரோம்வெலின் பல்வேறு கமிஷன்களில் ஓவன் உறுப்பினராகப் பணிபுரிந்துள்ளார். உதாரணமாக, யூதர்கள் இங்கிலாந்தில் வியாபாரம் செய்யவும், வாழவும் அனுமதிக்கப்படலாமா என்ற விஷயத்தை ஆராய்ந்த கமிஷனில் ஓவன் ஓர் உறுப்பினராக இருந்தார். அவர் சோஷீனியனிசத்துக்கு எதிராக Vindiciae Evangelicae என்ற நூலை வெளியிட்டார். திரித்துவப் போதனையை நிராகரித்து, கிறிஸ்துவை வெறும் மனிதனாகப் பாவித்து அவரின் சிலுவை மரணத்தை வெறும் உதாரணமாக மட்டுமே விளக்குகிறது சோஷீனியனிசம் என்ற போலிப்போதனை. ஓவனின் காலத்தில் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் தன்னுடைய முன்னாள் மகிமையை மறுபடியும் அடைந்தது. அதில் ஓவனோடு தொமஸ் குட்வின் (Thomas Goodwin), ஸ்டீபன் சார்நொக் (Stephen Charnock) போன்ற பெரும் பியூரிட்டன் இறையியலறிஞர்கள் பணிபுரிந்தனர். அவர்களுக்குக் கீழ் கிறிஸ்டோபர் ரென் (Christopher Wren), வில்லியம் பென் (William Penn), ஜோன் லொக் (John Locke), பிலிப் ஹென்றி (Philip Henry), ஜோசப் எலைன் (Joseph Alleine) போன்ற பின்னால் கிறிஸ்தவ உலகில் பெருங் காரியங்களை சாதித்தவர்கள் மாணவர்களாக இருந்தனர்.

இக்காலப்பகுதியின் இறுதியில் The Mortification of Sin in the Believers என்ற நூலை ஓவன் வெளியிட்டார். இந்நூலிலிருந்து ஓவனின் நம்பிக்கைக்கும் வல்லமைக்கும் எது காரணமாக இருந்தது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. எந்த சத்தியங்களுக்காகப் போராடினாரோ அந்த சத்தியங்களின் மூலம் கர்த்தரோடு ஓவனுக்கிருந்த விசேஷ ஐக்கியமும், உறவுமே அவருடைய விடாமுயற்சிக்குக் காரணம். ஓவனுடைய ஆக்கம் சுவிசேஷம் விளக்குகின்ற பரிசுத்தமாக்குதலுக்கு நல்ல உதாரணமாக இருக்கிறது. அதுவே ஓவனின் தனிப்பட்ட அனுபவங்களின்


ஸ்டீபன் சார்நொக்


ஜோன் லொக்


கிறிஸ்டோபர் ரென்


தொமஸ் குட்வின்


வில்லியம் பென்


பிலிப் ஹென்றி


ஜோசப் எலைன்

தொகுப்பாகவும் இருக்கிறது என்று நாம் நம்புகிறோம். இங்கே நாம் திறமைவாய்ந்த ஒரு வைத்தியன் ஆத்துமாவைப் பிடித்திருக்கும் நோயைத் தீர்க்க அதற்கு மருந்தளிப்பதைப் பார்க்கிறோம்.

ஓவன் தாம் விசுவாசித்ததை வெறுமனே தெரிந்து வைத்திருக்கவில்லை; தான் தெரிந்து வைத்திருந்ததை அவர் விசுவாசித்தார். தான் போதித்த சத்தியங்களில் அவர் ஆத்மார்த்தமாக அன்பு செலுத்தினார். பாவத்தை அழிப்பதைப் பற்றி அவரெழுதிய நூல் (Mortification) அவசியத்தின் காரணமாக எழுதப்பட்டதல்ல, தீர்மானத்தோடு எழுதப்பட்டது. பல்வேறு கடுமையான பணிகளுக்கு மத்தியிலும் அவர் கர்த்தரோடு கொண்டிருந்த ஆழமான ஐக்கியத்தை இது வெளிப்படுத்துகிறது. அதுமட்டுமல்லாமல் இந்த நூல் கர்த்தரோடிருக்க வேண்டிய ஐக்கியத்துக்கு உதவும் சில கடமைகளை பரிசேய சடங்காசாரத்தைக் காட்டுவதையும் இந்நூல் தவிர்க்கிறது: மனிதன் ஏற்படுத்துகின்ற கட்டளைகளை வெறித்தனமாகப் பின்பற்றுவதனால் ஏற்படுவதல்ல பரிசுத்தமாக்குதல். பரிசுத்தமாக்குதலில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருக்கும் ஆத்துமாவுக்கு ஆத்தும உணவு படைக்கின்றது இந்நூல். பாவத்தை அழிப்பதற்கான விதிமுறைகளைப் பின்பற்றி அதைத் தொலைக்கும் ஆத்துமாவின் பணியைப் பற்றி விபரமாக விளக்கி அப்பணியில் ஆத்துமாவை ஊக்குவித்து வழிகாட்டுகிறது ஓவனின் நூல்.

இந்தக் காலப்பகுதியில் ஓவன் தொடர்ச்சியாகப் பல நூல்களை வெளியிட்டு வந்தார். அவருடைய வாழ்நாள் உழைப்பின் பேறுகளான அந்நூல்களை நாம் இன்றும் வாசிக்க முடிவது நமக்குக் கிடைத்திருக்கும் பெரும் ஆசீர்வாதமே. தன்மீது சுமத்தப்பட்ட பெரும் பணிகளைக் கொண்டு நடத்துவதற்குத் தேவையான அத்தனைத் தகுதிகளையும் கொண்டிருந்தார் ஓவன். பணிகள் அதிகரிக்க அதிகரிக்க அப்பணிகளுக்கேற்ப அவருடைய அறிவும், திறமையும், சிந்தனையும் வளர்ந்தது என்றே கூறவேண்டும். அவரில் சுமத்தப்பட்ட பணிகள் அவருடைய சகல திறமைகளுக்கும் சவாலாக அமைந்து தன்னை முழுமையாக அப்பணிகளுக்கு ஒப்படைக்கும்படிச் செய்தன. இறுதியாக அப்பணிகளை ஓவன் துறந்தபோது அப்பணிகளின் மூலம் அடைந்திருந்த அபூர்வமான திறமைகளையும், சிந்தனை வளர்ச்சியையும் அவர் தொடர்ந்தும் அதிகளவுக்கு தன் வாழ்க்கையில் பயன்படுத்தினார்.

இந்த முறையில் தன் மேல் சுமத்தப்பட்டிருந்த பணிகளை ஓவன் ஒதுக்கிவைக்கும் சூழ்நிலை சடுதியாகவே வந்தது. ஒலிவர் குரோம்வெல் அரியாசனம் ஏறுவதை தடுப்பதற்கும், அப்படியே இறுதியில் அந்தப் பதவி கிடைக்குமானால் குரோம்வெல்லோடு பேசி அந்தப் பதவியை ஏற்பதில் இருந்து அவரைத் தடுத்துவிடுவதற்காகவும் செயல்பட்ட ஒரு குழுவின் உறுப்பினராக ஓவன் இருந்தார். இது ஓவனுக்கு எதிராகப் போய் அமைந்தது. குரோம்வெல் லோர்ட் புரொடெக்டராக (Lord Protector) நியமனமானபோது, அதுவரை சகல பாராளுமன்ற கூட்டங்களிலும், முக்கிய நிகழ்ச்சிகளிலும் கலந்து பிரசங்கமளித்திருந்த ஓவன் அந்நிகழ்ச்சிக்கு அழைக்கப்படவில்லை. 1657ல் ஆக்ஸ்போர்ட் தலைவர் பதவியில் இருந்து குரோம்வெல் விலகிக்கொண்டார். அடுத்த இரண்டு மாதங்களுக்குள் ஓவன் துணைத்தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். அதற்குப்பிறகு ஓவன் தன்னுடைய சகல திறமைகளையும் பயன்படுத்தி சுதந்திரமாக உழைக்கவும், ஊழியம் செய்யவும் வாய்ப்பு உருவானது. இந்த வருடத்தில் அவர் தன்னுடைய Communion with God என்ற நூலை வெளியிட்டார். 1658ல் அவரது நூலான Temptation வெளியிடப்பட்டது.

செப்டம்பர் 1658ல் தொமஸ் குட்வினோடும், வேறுசில கொங்கிரிகேஷனல் சபைப்பிரிவினரோடும் இணைந்து இலண்டனில் இருந்த சவோய் மாளிகையில் விசுவாச அறிக்கையொன்றைத் தயாரிக்க ஓவன் முற்பட்டார். ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் குட்வினும் ஓவனும் ஒரு வேத சத்தியத்தைப் பற்றிய விளக்கத்தை எழுதி முடித்து பின்பு அதைப்பற்றிய அறிவுபூர்வமான விவாதத்தில் ஈடுபட்டு, தேவையான மாற்றங்களைச் செய்து இறுதியில் அசெம்பிளியில் அதை ஏற்றுக்கொள்ளும்படி செய்தனர். வெஸ்ட்மின்ஸ்டர் இறையியலறிஞர்களுடைய சத்திய ஞானத்தை அங்கீகரித்து மதிப்புச் செய்யும் வகையில் ஓவனும், குட்வினும் ஏனையோரும் உழைத்துத் தயாரித்த சவோய் அறிக்கை வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையில் இருந்து அநேக பகுதிகளைப் பயன்படுத்திக் கொண்டது.

இப்பணியையெல்லாம் மறைத்துவிடும் மேகக்கூட்டத்தைப் போல ஓவனின் உடல்நிலை பாதிக்கப்பட்டது. அத்தோடு செப்டம்பர் 3ம் நாள் 1658ம் ஆண்டு குரோம்வெல் உயிரிழந்தார்.

நாடும் அத்தோடு குழப்பத்தில் மூழ்கியது. நாட்டின் வடபகுதியில் இருந்து மொன்க் எனும் ஜெனரல் தன் படையோடு இலண்டனை நோக்கி வந்தார். அதைத் தடுக்க எவரும் இருக்கவில்லை. ஜெனரலின் நோக்கம் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. வந்த கையோடு கொலை செய்யப்பட்ட அரசன் சார்ள்ஸின் மகனான சார்ள்ஸ் ஸ்டுவர்டின் நண்பனாகத் தன்னைக் காட்டிக்கொண்டார் ஜெனரல் மொன்க். 1660ல் இரண்டாம் சார்ள்ஸ் அரசனாக்கப்பட்டு மறுபடியும் அரச வம்சம் நாடாளுவது உயிர்ப்பிக்கப்பட்டது. இரண்டாம் சார்ள்ஸுக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டபோது நாட்டில் மத சுதந்திரத்திற்கான எந்த ஏற்பாடுகளையும் செய்வதில் எவரும் கவனம் செலுத்தவில்லை. வெறும் வாய் வார்த்தையாக சில வாக்குறுதிகளை மட்டுமே அரசன் அளித்திருந்தான்.

ஒத்துழையாவாதிகளுக்கெதிரான துன்புறுத்தல்

ஏற்கனவே ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக துணைத்தலைவர் பதவியை இழந்திருந்த ஓவன் ஸ்டெட்ஹாம்டன் என்ற ஊரில் இருந்த சிறிய சபையொன்றில் போதகராக கடமையாற்றி வந்தார். வெகு விரைவிலேயே உயிர்ப்பிக்கப்பட்ட அரச வம்சத்தின் மூலம் ஒத்துழையாவாதிகளுக்கு (Non-Conformists) எதிரான துன்புறுத்துதல் ஆரம்பமானது. 1662ல் கொண்டு வரப்பட்ட The Act of Uniformity என்ற சட்டம் இதற்கு ஓர் உதாரணம். (இதன் மூலம் சட்டத்தின்படி நடக்காத போதகர்கள் துன்புறுத்தலுக்குள்ளாயினர். அவர்கள் பிரசங்கிப்பதற்கும், ஊழியம் செய்வதற்கும் அனுமதிக்கப்படவில்லை.) இந்த சட்டம் கொண்டுவரப்பட்ட போது 2000 ஒத்துழையாவாத போதகர்கள் தங்களுடைய வாழ்வூதியத்தை இழந்தனர். அநேகர் அதுவரை உயிர்வாழ்ந்திருக்கவில்லை. ஓவன் தன் கொள்கைகளில் எதையும் மாற்றிக்கொள்ளாமல் இரகசியமாகத் தொடர்ந்து பிரசங்கித்து வந்தார். இந்தக் காலப்பகுதியில் கத்தோலிக்க பிரான்சிஷ்கன் பிரிவைச் சேர்ந்த ஒருவர் Fiat Lux என்ற நூலை வெளியிட்டு ஆங்கிலேயத் திருச்சபையில் இருந்த பிரிவுகளைத் தீர்ப்பதற்கு ஒரே வழி ரோமன் கத்தோலிக்க மதத்தை ஏற்று நடப்பதுதான் என்று விளக்கியிருந்தார். இதற்கு ஓவன் பெயர் குறிப்பிடாமல் பதில் தந்தார். அதற்கு பதிலளித்த கத்தோலிக்க மதவாதி பெயர் குறிப்பிடாமல் பதிலளித்ததால் ஓவனைக் கடுமையாகத் தாக்கியெழுதியிருந்தார். அதற்கு ஓவன் தன் பெயரைக்

குறிப்பிட்டுப் பதிலளித்து ரோமன் கத்தோலிக்க மதம் பற்றிய தர்க்கத்தில் பங்குபெற்றார்.

ஓவனோடு தர்க்கத்தில் ஈடுபடுகிறவர்கள் தப்புவது அரிது. தன்னுடைய சகல ஞானத்தையும் ஓவன் உடனடியாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் தன் கைப்பிடிக்குள் வைத்திருந்தார். தான் சந்தித்த எந்தக் கேள்வியையும் தன்னுடைய அபூர்வமான அறிவைப் பயன்படுத்தி ஒழுங்கோடு முறைப்படுத்தி பதிலளிக்க அவரால் முடிந்தது. அந்த சந்தர்ப்பத்திற்கான முழுப் பதிலையும் அவர் ஏற்கனவே மனதில் வைத்திருந்து, சிறிது சிறிதாக விஷயத்தை விளக்கி எழுதி பதிலளிப்பதில் வல்லவராக இருந்தார். ஓவனின் இந்தவிதமான விளக்கத்தை வாசிப்பதனால் மிகுந்த பயன் கிடைத்தாலும் அவருடைய ஆக்கங்களைப் புரிந்துகொள்ள சிறிது கஷ்டப்பட்டு வாசிப்பது அவசியம். ஓவன் ரோமன் கத்தோலிக்க மதத்தை எதிர்த்து நின்றது லோர்ட் கிளேரன்டனுக்கு (Lord Clarendon) மிகவும் பிடித்திருந்தது. அக்காலத்தில் இங்கிலாந்து (ஆங்கிலிக்கன்) திருச்சபை ஆத்மீகக் காரணங்களுக்காக அல்லாமல் அரசியல் காரணங்களுக்காக ரோமன் கத்தோலிக்கத்தை எதிர்த்து நின்றது. இங்கிலாந்து திருச்சபையின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நடந்து கொண்டால் அதில் மிக உயர்ந்த பதவியை அளிக்க விரும்புவதாக லோர்ட் கிளேரன்டன் ஓவனுக்கு தகவல் அனுப்பினார். திருச்சபையின் சுயாதீன அரசமைப்புக்காக எங்கும் எவரோடும் வாதிடத் தயாராக இருந்த ஓவன், அத்தகைய சுயாதீன சபை அமைப்பே கிறிஸ்துவுக்குப் பிறகு இரண்டு நூற்றாண்டுகளுக்கு வரலாற்றில் இருந்திருப்பதை லோர்ட் கிளேரன்டனுக்கு எடுத்துக்காட்டி "எனக்கு இங்கிலாந்து திருச்சபையில் உயர் பதவி தேவையில்லை, அது இல்லாமல் எங்களை எங்கள் வழியில் விட்டாலே போதும்" என்று பதில் அனுப்பினார்.



லோர்ட் கிளேரன்டன்

அதேவேளை அமெரிக்காவில் உள்ள பொஸ்டனுக்கு (Boston in New England) வந்து அங்கிருந்த முதலாம் கொங்கிரிகேஷனல் திருச்சபையில் பணியாற்றுமாறு அவருக்கு அழைப்பு வந்தது. அதற்கு ஓவன் என்ன பதிலளித்தார் என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை அது பற்றி

அவர் ஒரு தீர்மானத்துக்கு வரவில்லை அல்லது அவரால் அந்த அழைப்பை ஏற்று அங்கு போக முடியவில்லை.

நாட்டில் ஒத்துழையாவாதிகளுக்கெதிரான துன்புறுத்தல் வளர ஆரம்பித்தது. எதிரிகள் வந்துபோனபின்பு பியூரிட்டன் போதகர்கள் தலைதூக்கி ஆத்மீக ஜீவனின்றி அழிந்துகொண்டிருந்த மக்களுடைய ஆத்தும தாகத்தைப் போக்கப் பிரசங்கித்தார்கள். 1665ம் வருடத்தில் பாராளுமன்றம் ஆக்ஸ்போர்டில் கூடி "ஐந்து மைல் சட்டத்தைக்" (Five Mile Act) கொண்டுவந்தது. இந்தக் காட்டுமிராண்டித்தனமான சட்டம் நாட்டைச் சேர்ந்த போதகர்களை அவர்களுடைய சொந்த நாட்டிலேயே பிரசங்கம் செய்யவிடாமல் நாட்டை விட்டுத் துரத்தியது. அதாவது, எந்தப் போதகராவது தான் ஏற்கனவே பிரசங்கித்திருந்த இடத்திற்கு ஐந்து மைல்களுக்குள் எங்காவது பிரசங்கித்தாலோ அல்லது எந்த நகரமோ, பட்டணமோ பாராளுமன்ற அங்கத்தவரைக் கொண்டிருந்தால் அந்த நகரம் அல்லது பட்டணத்தின் எல்லைக்கு ஐந்து மைல்களுக்குள் எங்காவது பிரசங்கித்தாலோ அவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு கடுமையான துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டார்கள்.

மேலும் கடுந்துன்பங்கள் தொடர்ந்தன. 1666ல் பெருந்தீ இலண்டன் மாநகரை நாசப்படுத்தியது. பெரும் அழிவுக்கும், சாம்பலுக்கும் மத்தியில் சபைக் கட்டிடங்கள் எழுந்தன. அவற்றில் ஜோன் ஓவன், தொமஸ் மேன்டன், ஜோசப் கெரல், ரிச்சட் பெக்ஸ்டர், தொமஸ் வின்சென்ட், ஸ்டீபன் சார்நொக் போன்றோர் இலண்டன் மக்கள் மத்தியில் பிரசங்கம் செய்தனர்.

ஓவன் எழுதுவதை ஒருபோதும் நிறுத்தவில்லை. 1668ல் அவருடைய மூன்று சிறப்பான ஆக்கங்கள் வெளிவந்தன. அவை On Indwelling Sin, An Exposition of the 130th Psalm, Volume one of the Commentary of Hebrews ஆகியவையாகும். ஓவன் எபிரெயர் நிருபத்துக்கு எழுதிய முதலாம் பாக விளக்கவுரை அதன் தரத்தின் சிறப்பில் மட்டும் பெரிதாக இருக்காமல் எடையிலும், பக்கங்களின் எண்ணிக்கையிலும் மிகப் பெரிதாக இருந்தது. அது அவருடைய வாழ்நாள் ஊழியத்தின் பலனாக இருந்தது. 1669ல் Vindication of the Doctrine of the Trinity என்ற நூலும், 1672ல் Evangelical Love என்ற நூலும் வெளிவந்தன. அவற்றைத் தொடர்ந்து ஓய்வு நாளைப்பற்றியும் (Sabbath), சத்தியத்தை விட்டு விலகுவதைப் பற்றியும் (Apostasy) நூல்களை ஓவன் வெளியிட்டார்.

ஒத்துழையாவாதிகளுக்கு எதிரான துன்புறுத்துதல் குறையாமல் நாளுக்கு நாள் தொடர்ந்து அதிகரித்தது. 1672 வரை ஒத்துழையாவாதிகளுக்கு எந்த அமைதியும் கிட்டவில்லை. அவ்வருடம் இரண்டாம் சார்ள்ஸ் லைசன்ஸ் இருந்தால் மட்டும் ஒத்துழையாவாதிகள் பிரசங்கம் செய்யலாம் என்ற சட்டத்தைக் கொண்டுவந்தான். ஜோன் ஓவனும் அவருடைய நண்பர்களும் இந்த சுதந்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறவில்லை. ஜோசப் கெரல் அதன் பிறகு கர்த்தரை அடைந்தார். 1673ல் அவருடைய சபையும், ஓவன் பணிபுரிந்த சபையும் ஒன்றிணைந்தன.

ஓவனுக்கு உயரிடங்களில் நண்பர்கள் இருந்தும், அரசனோடு சந்தித்துப் பேசும் வசதியிருந்தும் ஒத்துழையாவாத பியூரிட்டன்களுக்கு எதிரான துன்புறுத்துதல்கள் அதிகரிப்பதை அவரால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஜோன் பனியன் போன்றவர்களுக்கு துணை போவதற்காக ஓவன் தன் சக்திக்கு மேலான சகல நடவடிக்கைகளையும் எடுத்தார். பனியனின் பிரசங்கத்தில் ஓவன் பெரும் அக்கறையும், நாட்டமும் கொண்டிருந்தார். ஒரு முறை பனிக்காலத்தில் இலண்டனில் சில நூறு பேர்வரையிலான கூட்டத்தில் அதிகாலை வேளையில் ஜோன் பனியன் பிரசங்கமளிப்பதைக் கேட்க ஓவன் சென்றிருந்தார். அதைப் பற்றிக் கேள்விப்பட்ட அரசன் ஓவனை அழைத்து, "வெறும் இரும்புச் சட்டியையும், பானையையும் சரி செய்யும் ஒருவனின் அசட்டுப் பேச்சைப் பெரும் படிப்பாளியான உங்களால் எப்படிக் கேட்டுச் சகிக்க முடிகிறது?" என்று வினாவினான். அதற்குப் பதிலளித்த ஓவன், "அந்த இரும்புச் சட்டி, பானை சரிசெய்யும் மனிதனின் பிரசங்க வரம் எனக்குக் கிடைக்குமானால் என்னுடைய படிப்பையெல்லாம் கொடுத்துவிடத் தயாராக இருக்கிறேன்" என்றார்.


ஜோன் பனியன்

1647ல் ஓவன் தன்னுடைய Pneumatologia, or A Discourse Concerning the Holy Spirit என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் மூன்று வகைக் கூட்டத்தாருக்கு எதிராக எழுதப்பட்டது. முதலாவதாக, ஆர்வக் கோளாறுடன் பரிசுத்த ஆவியானவர் பற்றிய போதனைகளைக்

குழப்பியவர்கள், இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்தை நிராகரித்த சோஷீனியன் போலிப்போதனை, மூன்றாவதாக, பரிசுத்த ஆவியானவர் பற்றிய வேதபூர்வமான போதனைகளைக் கொண்டிருந்தும் அதன் நடைமுறைச் செயல்பாட்டிலும், அனுபவத்திலும் எந்தவித ஆர்வமோ நாட்டமோ இல்லாதிருந்தவர்கள்.

ஓவனின் இறுதிக் காலப் பணிகள்

1676ம் ஆண்டு ஜனவரியில் ஓவன் தன் மனைவியை இழந்தார். அவருடைய திருமணத்தைப் பற்றி நமக்கு மிகக்குறைவான விபரங்களே கிடைக்கின்றன. அவருடைய மனைவி மிகவும் அமைதியானவர் என்றும், ஓவன் மீது மிகுந்த அன்பு காட்டியவ ரென்றும், அன்போடுகூடிய தாம்பத்திய வாழ்க்கை நடத்தினார் என்ற விபரங்கள் மட்டுமே அவரைப் பற்றி அறிந்துகொள்ள உதவுகின்றது. மனைவியை இழந்து ஓவன் பதினெட்டு மாதங்கள் மட்டுமே தனித்திருந்தார். அவர் தன் மனைவி மீது காட்டிய அன்பையும், அவரோடு கொண்டிருந்த நெருக்கமான உறவையும், தாம்பத்திய வாழ்க்கை மீது கொண்டிருந்த ஈடுபாட்டையும் இது விளக்குவதாக இருக்கின்றது. 1677ம் ஆண்டு ஜூன் 21ம் நாள் ஓவன் ஒரு விதவையை மறுமணம் செய்து கொண்டார். இந்தத் திருமணத்திற்குப் பிறகு தனக்குக் கிடைத்த வருமானத்தினால் ஓவன் தன்னுடைய இறுதிக்காலம்வரை வாழ்க்கையில் வளமுள்ளவராக பணக்கஷ்டமின்றி வாழ முடிந்தது.

இருந்தபோதும் அவருடைய வாழ்க்கை தன்னுடைய இறுதிக்காலத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. வாழ்க்கையில் தொடர்ந்து காணப்பட்ட உணர்ச்சியைத் தூண்டும் நிகழ்வுகளும், வறுமையையும், அதிகாரத்தையும் மாறி மாறி அனுபவித்ததால் உருவான தளர்ச்சியும், தொடர்ச்சியான கடுமையான படிப்பும் அவருடைய வாழ்க்கையில் பாதிப்புகளை ஏற்படுத்தாமலில்லை. கடுமையான ஆஸ்த்துமா வியாதி அடிக்கடி அவரைப் பிரசங்கம் செய்ய முடியாமல் தடுத்தது. அத்தோடு வயிற்றில் உருவான "கட்டி" (gallstones) அவருக்கு பெருந்துன்பத்தை ஏற்படுத்தியது. உதவியாளர்களையும், குறிப்பெடுப்பவர்களையும் வைத்து அவர் தொடர்ந்தும் உழைத்தார்.

1677ம் ஆண்டு அவர் Justification By Faith என்ற நூலை வெளியிட்டார். அவர் இறுதியாக எழுதிய நூல்கள்

ரோமன் கத்தோலிக்க மதத்திற்கு எதிரானவையாகவும், கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் மெய்யான கிறிஸ்தவ ஒற்றுமையை வலியுறுத்தியவையாகவும் இருந்தன. சரீரத்தில் பலவீனங்கள் அதிகரிக்க அதிகரிக்க அவர் சுவிசேஷத்தின் எளிமையானதும், அடிப்படையானதுமான சத்தியங்களில் அதிக ஆர்வம் காட்டி அவற்றில் இன்பம் கண்டார். இந்தக் காலப்பகுதியில் அவர் எழுதிய நூல்கள்: Christologia: or, A Declaration of the Glorious Mystery of the Person of Christ - God and Man (1679), The Grace and Duty of Being Spiritually-Minded (1681), and Meditations on the Glory of Christ. (இது அவருடைய மரணத்திற்குப் பிறகு 1684ல் வெளியிடப்பட்டது).

பக்கிங்ஹம்ஷயரில் வோர்பர்ன் (Woburn, Buckinghamshire) என்ற இடத்தில் வாழ்ந்த ஒரு முக்கியஸ்தர், தன்னுடைய வீட்டில் இருந்து ஓய்வெடுப்பதோடு துன்புறுத்துதலுக்கு ஆளாகிய ஏனைய விசுவாசிகளோடு இருந்து அவர்களுக்கு ஆலோசனை தரும்படி ஓவனை அழைத்தார். ஆனால், ஓவனின் நோய் அதிகரித்தது. அங்கிருந்து ஓவன் தன்னுடைய சபைக்கு ஒரு கடிதத்தை எழுதினார். அது நீண்ட கடிதமாக இருந்தபோதும் தன் சபை மக்களுடைய ஆத்தும விருத்தி பற்றி அவர் கொண்டிருந்த பரிசுத்தமான விருப்பங்களை அக்கடிதம் உணர்த்துவதாயிருக்கிறது. அவர் இலண்டனுக்கு திரும்பியதும் கர்த்தர் அவரோடிருந்து அவரைக் கவனித்துக் கொண்டார். இறுதியில் அவர் தனக்கு சொந்தமாக ஈலிங்கில் (Ealing) இருந்த வீட்டிற்கு புறப்பட்டுப் போனார். அவருடைய மரணம் இலகுவானதாக இருக்கவில்லை. சரீரத்தில் பலமுள்ளவராயிருந்த சக போதகரான அன்டுரு புளரைப் (Andrew Fuller) போல இருதயத்தில் வலிமையுள்ளவராக ஓவனிருந்தார். அவர் கடைசிவரை அமைதியோடு மரணத்துடன் போராடி, வலியையும் பொறுத்துக்கொண்டு தன்னுடைய நண்பரான சார்ள்ஸ் பிளீட்வுட்டுக்கு (Charles Fleetwood) தான் மரணத்தை சந்திப்பதற்கு முதல் நாள் ஒரு கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தார்:

> "கரத்தைப் பயன்படுத்தி என்னால் ஒரு வார்த்தை எழுத முடியாவிட்டாலும் இந்த உலகத்தில் இருக்கும்போது ஒரு வார்த்தையையாவது உங்களோடு நான் பேச ஆசைப்பட்டு என்னுடைய மனைவியின் கரத்தைப் பயன்படுத்தி அதை எழுதி அனுப்புகிறேன். உங்களுடைய அளப்பரிய



சார்ள்ஸ் பிளீட்வுட்



அன்டுரு புளர்

கருணை, அது எனக்கு எதை அனுப்பிவைத்திருக்கிறது என்பதை உணர்ந்து அதைப் பெரிதாக மதிக்கிறேன். இந்த உலகத்தில் நான் செலவிடும் இறுதிக் காலங்களில் அது எனக்கு மிகுந்த ஆறுதலைத் தரும். என்னுடைய இருதயம் வாஞ்சிக்கிறவரிடம் நான் இனிப் போகப்போகிறேன். அதைவிட என்னை நித்திய அன்போடு நேசிப்பவரிடம் நான் போகப்போகிறேன். அதுவே என்னுடைய ஆறுதல்களுக்கெல்லாம் அடித்தளமாக இருக்கிறது. இந்தப் பாதை பெருந்துன்பமானதாகவும், தளர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது. பலவிதமான பெரும் வலி சரீரத்தில் பெரும் காய்ச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. என்னுடைய வைத்தியர்களின் ஆலோசனைப்படி என்னை இன்று இலண்டனுக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்தப் பிரயாணத்தைச் செய்ய முடியாத என்னுடைய சரீரத்தளர்ச்சி எங்களெல்லோருக்கும் மனச் சோர்வை ஏற்படுத்தியிருக்கிறது. நான் என்னுடைய சபையாகிய கப்பலை பெருங்காற்றின் மத்தியில் விட்டுப் போகிறேன். ஆனால், மாபெரும் கப்பலோட்டி இருக்கும்போது சாதாரணமான இந்த துடுப்புப் போடுகிறவனை இழப்பதால் ஒன்றும் பாதிப்பில்லை. ஜெபியுங்கள், நம்பிக்கை கொள்ளுங்கள், பொறுமையோடிருங்கள், தளர்ச்சியடையாதீர்கள்; வாக்குத்தத்தம் அழிக்க முடியாததாக இருக்கிறது, அவர் நம்மை ஒருபோதும் விட்டுப் போகமாட்டார், கைவிடமாட்டார். உங்கள் மனைவியின் நோயை அறிந்து நான் மிகவும்


கவலையுறுகிறேன். தேவன் அவரோடிருந்து, அவருக்கு துணைபுரிந்து விடுதலை அளிக்கட்டும். கிறிஸ்துவில் எனக்கு நெருங்கியவர்களான உங்களுடைய மனைவிக்கும் உறவினர்களுக்கும் என்னுடைய அன்பையும், மரியாதையையும் தெரிவியுங்கள். மரணத்தை எதிர்நோக்கியிருக்கின்ற உங்களுடைய நண்பனுக்காக ஊக்கத்தோடு ஜெபியுங்கள். அதைச் செய்வீர்கள் என்பதில் நான் ஆறுதலடைகிறேன். முழுவதும் உங்கள் - ஜோ. ஓவன்."

1683ம் ஆண்டு ஆகஸ்டு 24ம் நாள் ஓவனுக்கு மரணம் நேர்ந்தது. ஓவன் தான் நேசித்த இயேசு கிறிஸ்துவின் சன்னிதானத்தில் தன்னுடைய கண்களும் கரங்களும் விரித்த நிலையில் போய்ச்சேர்ந்தார். அந்நாள் செயின்ட் பர்த்தலோமியு நாளின் 21வது வருட நினைவு தினம். அந்நாளிலேயே The Act of Uniformity என்ற சட்டம் நாட்டில் தன்னுடைய கொடூரத்தைக் காட்டியிருந்தது. அதற்குப் பதினொரு நாட்களுக்குப் பிறகு ஓவன் பன்ஹில் (Bunhill Fields) மயானத்தில் புதைக்கப்பட்டார்.




கர்த்தருக்குள் நித்திரையடைந்த ஓவனின் உடல் அடக்கம்பண்ணப்பட்ட இடம்

இன்றும் அச்சிலுள்ள ஓவனின் படைப்புகளில் சில




The Death of Death in the Death of Christ



The Mortification of Sin




An Exposition of the 130th Psalm




The Dominion of Sin and Grace



Communion with God




Temptation



The Display of Arminianism



Vindiciae Evangelicae



Justification By Faith

கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு

(ஓவனின் நூல் பற்றிய அறிமுக விளக்கம்)

"வாசகர்களே! நீங்கள் தொடர்ந்து இந்நூலை வாசிக்கும் எண்ணத்தைக் கொண்டிருந்தால், சிறிது நேரத்தைக் கொடுத்து இதை வாசிக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு நாடக அரங்கில் நுழைந்துவிட்டு உடனே வெளியேறிவிடுகிறவரைப் போல இந்நூலின் தலைப்பை மட்டும் வேகமாய் வாசித்துவிட்டுப் போகிறவராக இருந்தால், இதை நீங்கள் வாசிப்பதில் பயனில்லை. போய் வாருங்கள்! இந்நூலில் விளக்கப்பட்டிருக்கும் மிகமுக்கியமான போதனைகளில் ஆர்வமுடையவர்களுக்கும், கிறிஸ்தவ சிந்தனைகளின் மூலம் ஆத்மீகத் தேவைகளைத் தீர்த்துக்கொள்ளவும், இந்நூலில் விளக்கப்பட்டிருக்கும் அரும் போதனைகளின் மூலம் பயனடையவும் விரும்புகிறவர்களுக்கு நான் ஒரு சில வார்த்தைகளை ஆரம்பத்திலேயே முன்வைக்க விரும்புகிறேன்."

"கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்" எனும் நூலில் ஜோன் ஓவன் மேல்வரும் வார்த்தைகளையே வாசகர்களுக்கு ஆரம்ப உரையாக அளித்து நூலை எழுதியிருக்கிறார். அசட்டையாக நூலை வாசிக்க முற்படும் வாசகனை இந்த வார்த்தைகள் சுண்டி இழுக்காது. அவ்வாறு அவனை சுண்டி இழுப்பதற்காக ஓவன் இந்த வார்த்தைகளை அவன் முன் வைக்கவில்லை. தான் வாசகனுக்கு முன் படைக்கும் விஷயத்தின் முக்கியத்துவத்தை நன்றாக உணர்ந்திருந்த ஓவன் உடனடியாகவே விஷயத்துக்கு வந்துவிடுகிறார். தன்னுடைய நூலில்

கையாளப்பட்டிருக்கும் விஷயம் அதிமுக்கியமானது என்பதால் அவர் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அதுமட்டுமல்லாது நூலை வாசிக்கும் வாசகனும் அந்த நோக்கத்தோடேயே நூலை அணுக வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார். கவனத்தோடு சிந்தனையைப் பயன்படுத்தி வாசிக்கிறவர்கள் ஓவனின் நூலின் மூலம் பெரும் பயனடைவார்கள்.

தொமஸ் மூர் என்ற மனிதர் 1643ம் ஆண்டு The Universality of God's Free Grace in Christ to Mankind என்ற ஒரு நூலை எழுதி வெளியிட்டார். அந்த நூலுக்கு பதிலளிக்குமுகமாகவே ஜோன் ஓவன் "கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்" எனும் நூலை எழுதினார். தொமஸ் மூரின் நூலினால் அப்படியொன்றும் பெரிய பயனில்லை என்று ஜிம் பெக்கர் கருத்து வெளியிட்டிருக்கிறார். இருந்தபோதும் ஓவனின் காலத்தில் அந்த நூல் மட்டுமே கிறிஸ்து யாருக்காக மரித்தார்? என்ற வினாவுக்கான முழு விளக்கத்தை எதிர்ப்பாளர்களின் கண்ணோட்டத்தின் மூலம் விளக்க முற்பட்டது. அதேவேளை இந்த விஷயத்தைப் பற்றிய முழுப் போதனையையும் அளிக்க தான் ஏழு வருடங்களுக்கு மேலாகக் கடினமாக உழைக்க நேரிட்டிருந்தது என்பதையும் ஓவன் குறிப்பிட மறக்கவில்லை.

தொமஸ் மூரின் நூலின் தலைப்பு அவருடைய நூலின் உள்ளடக்கத்தை விளக்குவதாக இருந்தது. அவரது நூல், உலகத்திலுள்ள சகல மக்களையும் இரட்சிப்பதற்காக கிறிஸ்து மரித்தார் என்றும், அவர்கள் அனைவருமே இரட்சிப்பை அடைவார்கள் என்றும் விளக்கியது. இந்த நூலுக்கு எதிரான வாதத்தை முன்வைக்கும்போது இதே விளக்கத்தை அளித்த ஆர்மீனியனிசத்தையும், அமிரெல்டியன் (Amyraldian) போதனையையும் ஓவன் கவனிக்காமல் இருக்கவில்லை. ஆர்மீனியனிசம் மனித சித்தத்தின் தீர்மானத்தின் மூலம் இரட்சிப்பு ஒருவரில் நிகழ்கிறது என்று போதித்தது. இதன் பிரகாரம் இரட்சிப்பை அடைவதும் அடையாததும் மனிதனுடைய சித்தத்தின் செயல்பாட்டிலேயே தங்கியிருந்தது. அமிரெல்டியன் போதனையோ, கிறிஸ்துவின் சிலுவைப்பலி சகல மக்களுக்குமாக நிறைவேற்றப்பட்டிருந்தபோதும், கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மட்டுமே விசுவாசமாகிய நிபந்தனையின் மூலம் இரட்சிப்பை அடைகிறார்கள் என்று விளக்கியது. குறிப்பிட்டவர்களுக்காக மட்டுமே

கிறிஸ்து மரித்தார் (Particular redemption) என்ற ஓவனின் தெளிவான விளக்கம் இந்தப் போதனைகளை மட்டும் கருத்தில் கொண்டு கொடுக்கப்படவில்லை. ஆர்மீனியனிசமும், அமிரெல்டியன் போதனையும் கிறிஸ்துவின் சிலுவைப் பலியை நோக்கியவிதத்தைவிட முற்றிலும் வேறுபட்டவிதமாக, தெளிவான நோக்கத்தோடு ஓவன் அதை அணுகினார். தனக்குப் பின்னால் வந்த ஸ்பர்ஜனைப் போலவே, ஓவனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதை உணர்ந்தார். கீழ்வரும் ஸ்பர்ஜனின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> "என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவென்றால், கல்வினிசத்தைப் பிரசங்கிக்காவிடில் கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கத்திற்கே இடமில்லை என்பதுதான். கல்வினிசமே சுவிசேஷம்; சுவிசேஷத்திற்குக் கொடுக்கப்பட்ட இன்னொரு பெயரே கல்வினிசம். கிரியைகளின்றி விசுவாசத்தினால் நீதிமானாகுதலையோ அல்லது கிருபையை அளிப்பதில் கர்த்தர் இறையாண்மையுள்ளவர் என்பதையோ அல்லது என்றும் மாறாத, நித்தியமான, தெரிந்துகொள்ளும் கர்த்தருடைய அன்பையோ பிரசங்கிக்காவிடில் சுவிசேஷத்தை சுவிசேஷமாக நம்மால் ஒருபோதும் பிரசங்கிக்க முடியாது. தன்னால் தெரிந்து கொள்ளப்பட்ட குறிப்பிட்ட மக்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்பதை அடிப்படையாகக் கொண்டமைந்த சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காவிடில் நமது பிரசங்கம் சுவிசேஷப் பிரசங்கமாக இருக்காது. கர்த்தரால் அழைக்கப்பட்ட பின்பு பரிசுத்தவான்கள் ஆத்மீகத்தை இழந்து போகும்படிச் செய்து, கர்த்தரின் குழந்தைகள் கிறிஸ்துவை விசுவாசித்த பிறகு நித்திய தண்டனைக்கான நெருப்பில் எரியும்படிச் செய்யும் சுவிசேஷத்தை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அத்தகைய சுவிசேஷத்தை நான் அறவே வெறுக்கிறேன்."

தன்னுடைய நூலில் ஜோன் ஓவன் சந்திக்கும் முக்கியமான கேள்வி, கிறிஸ்துவின் சிலுவை மரணம் அதன் நோக்கத்தை முற்றாக நிறைவேற்றியதா? அல்லது அதில் தோல்வியை சந்தித்ததா? என்பதுதான். இதிலிருந்து ஓவன் இந்த விஷயத்தை வேதஅடிப்படையிலும், இரட்சிப்பின் அடிப்படையிலும் நோக்குவதைப் பார்க்க முடிகிறது. இந்தக் கேள்விக்கான பதில்

சுவிசேஷத்தின் அடிப்படையைக் குறித்ததாக இருக்கிறது. அத்தோடு கர்த்தரின் சுயதன்மையையும், நமது இரட்சிப்புக்காக திரித்துவ தேவன் எடுத்த நடவடிக்கைகளையும் குறித்ததாகவும் இருக்கிறது. நம்முடைய கர்த்தர் தம்முடைய திட்டத்தில் தோல்வியைச் சந்தித்தாரா? என்ற கேள்விக்கான ஓவனின் பதில் பின்வருமாறு இருந்தது:

> "ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இயேசு கிறிஸ்து தன்னுடைய பிதாவின் திட்டத்தின்படியும், சித்தத்தின்படியும் தன்னை சிலுவையில் பலியாகச் செலுத்தினார். அத்தோடு, தன்னுடைய மரணத்தின் மூலம் திட்ப உறுதியாக நிறைவேற்றப்பட்ட அத்தனை பலன்களையும் எவரெவருக்காக அவர் மரித்தாரோ அத்தனை பேரும் கர்த்தருடைய திட்டத்தின்படியும், சித்தத்தின்படியும் பெற்றனுபவிக்க பரலோகத்திலிருந்து தொடர்ந்து பரிந்துரை செய்து வருகிறார்."

வேதமளிக்கும் மேல்வரும் போதனையை ஓவன் மறுபடியும் தனது நூலில் இன்னோரிடத்தில் பின்வருமாறு விளக்குகிறார்:

> "உலகத்தோற்றத்துக்கு முன்பே தானளித்த வாக்குத்தத்தத்தின்படி, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மேல் தான்வைத்திருக்கும் நித்திய அன்பின் பிரகாரம் சகலமும் பூரணமாக நிறைவேறி வரும் காலத்தில் கர்த்தர் தன்னுடைய குமாரனை அனுப்பிவைத்தார். தன்னுடைய வாக்குத்தத்தம் நிறைவேறி நித்திய ஜீவனுக்காக நியமிக்கப்பட்ட அனைவரும் தன்னிடத்தில் வரும்படியாகவும், தன்னுடைய மகிமை பிரகாசிக்கும் படியும் நித்திய மீட்பைக் கிறிஸ்து தன்னுடைய சிலுவைப்பலி மூலம் அழிவற்றதும், மகிமையுள்ளதுமான விலையைக் கொடுத்துப் பெறும்படிச் செய்தார்."

மேலே நாம் வாசித்த ஓவனின் வார்த்தைகளை இலகுவாக விளக்குவதானால் கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பியதில் கர்த்தருக்கு உறுதியான ஒரு பெரு நோக்கம் இருந்தது எனலாம். அத்தோடு கர்த்தருடைய குமாரன் உறுதியான ஒரு நோக்கத்தோடு தன்னை சிலுவையில் பலி கொடுத்தார். அதுமட்டுமல்லாமல் அவர் இப்போது உறுதியானதும், தீர்க்கமானதுமான ஒரு

நோக்கத்தோடு பரிந்துரை செய்து வருகிறார். கிறிஸ்துவின் மரணபலியின் பலன்களை பரிசுத்த ஆவியானவர் உறுதியான நோக்கத்தோடு பாவிகள் அனுபவிக்கும்படி செய்து வருகிறார். இந்த உறுதியான தெய்வீக நோக்கம் எந்தவிதத்திலும் தோல்வியடைய முடியாது. தான் நிறைவேற்றுவதற்காக வந்த நோக்கங்கள் அனைத்தையும் இரட்சகரான இயேசு கிறிஸ்து நிச்சயமாக நிறைவேற்றினார்.

தன்னுடைய நூலின் மூலம் ஓவன் போலிப்போதனையைத் தகர்த்தெறிவதோடு இருந்துவிடாமல் உறுதியாக ஒரு சத்தியத்தையும் நிலைநாட்டுகிறார் என்பதை நாம் உணருவது அவசியம். திரித்துவ தேவனைவிட அன்பு செலுத்துவதில் தாம் பெரியவர்கள் என்றும், வல்லமையுள்ளவர்கள் என்றும், ஞானவான்களென்றும் காட்டிக்கொள்ள விரும்பும் அகங்காரம் பிடித்தவர்களின் முட்டாள்தனத்தை சுட்டிக்காட்டுவதை மட்டும் நோக்கமாகக் கொண்டிராமல் ஓவன் இரட்சிப்பின் மூலம் கர்த்தரின் மகிமை வெளிப்படுவதை விளக்குவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறார். "கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்" எனும் தன்னுடைய நூலின் நான்கு பாகங்களில் வேதம் போதிக்கும் இந்த சத்தியத்தை ஆணித்தரமாக விளக்குகிறார் ஓவன்.

ஓவன் தன்னுடைய நூலின் முதலிரண்டு பாகங்களிலும், கிறிஸ்துவின் மரணம் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக இரட்சிப்பை வழங்குகிறது என்ற தெளிவான வேதத்தின் போதனையை முன்வைக்கிறார்.

நூலின் முதலாவது பாகம் கிறிஸ்துவின் சிலுவைப் பலியை விளக்குகிறது. இப்பகுதியில் அப்பலிக்குக் காரணமான அம்சங்களையும், அதன் நோக்கத்தையும் ஓவன் ஆதாரப்பூர்வமாக விளக்குகிறார். அதை நாம் கடந்து போவோமானால் அடுத்தகட்டமாக ஓவன் திரித்துவ தேவனே கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக இப்பலி நிறைவேறக் காரணமாக இருந்தார் என்றும், அதில் பிதா, குமாரன், ஆவியானவர் ஆகியோர் எவ்வாறு இணைந்து இயங்கி அப்பணி நிறைவேறக் காரணமாக இருந்தார்கள் என்பதையும் விளக்குகிறார். மீட்பு நிறைவேறுவதற்கு கிறிஸ்துவின் பலியும் கர்த்தருக்கும் மனிதருக்கும் இடையிலான அவருடைய மத்தியஸ்துவமுமே காரணமாக அமைந்தது. கிறிஸ்துவின் இத்தகைய மீட்புப்பணிக்கு

எதிரான வாதங்களை ஓவன் தன் நூலில் விளக்கி அவற்றிற்கு வேதபூர்வமான பதில்களை இப்பகுதியில் தந்திருக்கிறார்.

ஓவனின் நூலின் இரண்டாம் பாகம், எந்த நோக்கத்திற்காக கர்த்தரின் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்பதை விளக்குகிறது. ஓவன் இதில், கர்த்தரின் மகிமைக்காகவே நமது இரட்சிப்பு நிறைவேறியது என்பதை விளக்குகிறார். நமது இரட்சிப்பின் உடனடி நோக்கம் கர்த்தரிடத்தில் நம்மைக் கொண்டு வருவதுதான். இந்த இடத்தில் ஓவன், கிறிஸ்துவின் மீட்பு அதோடு தொடர்புடைய அத்தனை கிருபைகளையும் உள்ளடக்கிக் காணப்படுகிறது என்பதை வேதத்தில் இருந்து தெளிவாக விளக்குகிறார். ஓவனைப் பொறுத்தவரையில் தன்னுடைய இரட்சிப்பிற்காக மனிதன் அளிக்கும் பங்காக விசுவாசம் காணப்படவில்லை. அது தேவ ஆட்டுக்குட்டி தன்னை விலையாகக் கொடுத்து பெற்றுத்தந்திருக்கும் ஈவு என்று ஓவன் வேத ஆதாரத்தோடு விளக்குகிறார். இதற்கு மாறான கருத்துக்களுக்கெல்லாம் இப்பகுதியில் ஓவன் தகுந்த பதில்களை அளித்திருக்கிறார். ஓவன் ஒரு வலிமையான வேத விளக்கத்தை இங்கே நம்முன் வைக்கிறார். அதாவது, கிறிஸ்து தன்னுடைய மீட்புப்பணியை நிறைவேற்றும் வரைக்கும் இறையாண்மையுள்ள கர்த்தர் கட்டிவைக்கப்பட்டிராமல், தன்னுடைய வல்லமையின் மூலம் கிறிஸ்து சிலுவையில் மரிக்கும்படிச் செய்து அவருடைய மரணத்தின் மூலம் நம்மை மீட்டிருக்கிறார் என்பதை ஆணித்தரமாக விளக்கியிருக்கிறார்.

தன்னுடைய விளக்கங்களுக்கு ஆதாரமான வேதவசனங்களைத் தொகுத்து மூன்று குழுக்களாக நம்முன் வைக்கிறார் ஓவன்.

1. முதலாவது குழுவிலுள்ள வேத வசனங்கள் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் குறிப்பிட்ட மக்களை இரட்சிப்பதே கர்த்தருடைய ஆலோசனையும் நோக்கமுமாக இருந்தது என்பதை விளக்குகின்றன.

2. இரண்டாம் குழுவிலுள்ள வேத வசனங்கள் கிறிஸ்துவின் சிலுவைப்பலி நிறைவேற்றுதலின் காரணமாக குறிப்பிட்ட மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்பதைக் காட்டுகின்றன.

3. மூன்றாம் குழுவிலுள்ள வசனங்கள் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதை விளக்குகின்றன.

ஓவன் இப்பகுதியில், கிறிஸ்து விலை கொடுத்துப் பெற்றுக் கொண்ட மீட்புப்பலன்களுக்கும், அப்பலன்களை நாம் அனுபவ பூர்வமாக அடைவதற்கும் இடையிலுள்ள வேறுபாட்டையும் விளக்குகிறார். இந்த வேறுபாட்டை நாம் எவ்வாறு விளங்கிக்கொள்ள வேண்டுமென்பதையும், இதை ஆர்மீனியனிசப் போதனை எவ்வாறு திரித்துப் போதிக்கிறது என்பதையும் ஓவன் விளக்குகிறார். ஆர்மீனியனிசம் இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவை என்று விளக்குகின்றது. ஆனால், இவை இரண்டும் ஒன்றே (இணைபிரியாதவை) என்று ஓவன் விளக்குவதோடு, இவற்றின் நிறைவேறுதலின் கால அளவைப் பொறுத்தவரையில் மீட்புப் பலன்களுக்கான கிறிஸ்துவின் பலி முதலாவதாக நிகழ்கிறது என்கிறார்.

தன் நூலின் மூன்றாவது பாகத்தில் உலகளாவிய மீட்புக்கெதிரான (Universal redemption) பதினாறு வாதங்களை வேதத்தில் இருந்து நம்முன் வைக்கிறார் ஜோன் ஓவன். ஜிம் பெக்கர் இவற்றைப் பற்றி விளக்கும்போது, "இவற்றில் மூன்றாவதைத் தவிர ஏனைய அனைத்தும் தெளிவான வெளிப்படையான ஆதாரங்களாக இருக்கின்றன. இவையனைத்தும் வேதம் போதிக்கும் கிறிஸ்துவின் மீட்புப்பணிக்கெதிரான உலகளாவிய மீட்புப் போதனை எந்தளவுக்கு வேதத்தோடு பொருந்தியதாக இல்லை என்பதைக் காட்டுகின்றன" என்று கூறுகிறார். ஓவன் வேதம் முழுவதிலும் வார்த்தை வார்த்தையாக, வசனம் வசனமாக கிறிஸ்துவின் இரட்சிக்கும் பணிபற்றியும் அதன் நோக்கம் பற்றியும் போதிக்கும் விளக்கங்களைத் தேடித்தேடி அவற்றை சாட்சிக்கு மேல் சாட்சியாக நம்முன் வைக்கிறார். இந்தப் பகுதிபற்றி ஜிம் பெக்கர் சொல்லியிருப்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

"ஓவனுடைய விளக்கங்கள் சுவிசேஷத்தின் அடிப்படை மையத்தை விளக்கும் பரந்த வேதவிளக்கமாகும். இவற்றை நாம் அவசியம் கவனித்துப் படிக்க வேண்டும். பாரம்பரியப் போதனையொன்றுக்கு வக்காலத்து வாங்கும் ஒரு விளக்கமாகக் கருதி இவற்றை நாம் நிராகரித்துவிடக்கூடாது. உலகளாவிய மீட்பு வேதம் முழுவதிலும் வசனம் வசனமாகப் போதிக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துக்காட்டி ஜோன் ஓவனின் வாதங்களைத் தகர்த்தால் தவிர, மீட்பு குறிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே

சொந்தமானது என்ற கல்வினிசப் போதனையை ஒரு பூதமாகக் கருதி நிராகரிக்க எவருக்கும் உரிமை கிடையாது. இதுவரை எவராலுமே ஓவனின் போதனையை நிராகரிக்க முடியவில்லை" என்கிறார் ஜிம் பெக்கர்.

ஓவனின் வாதங்கள் இரண்டு முடிவுகளை முன்வைக்கின்றன. முதலாவதாக, கிறிஸ்துவின் மீட்புப்பணி வெற்றிகரமாக நிகழ்ந்து தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றியிருப்பதால் இறுதியில் அழிந்து போகிறவர்களை இரட்சிப்பதற்காக அது திட்டமிடப்பட்டதாக இருக்க முடியாது. இரண்டாவது, எல்லா மனிதர்களையும் இரட்சிப்பது கர்த்தரின் நோக்கமாக இருந்திருந்தால் கர்த்தர் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதில் தோல்வியடைந்திருக்க வேண்டும் (அது கர்த்தரை அவமதிக்கும் செயல்) அல்லது எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் (ஆனால், கர்த்தர் ஒருபோதும் தன்னுடைய நோக்கத்தில் தவற முடியாது).

ஓவனின் நூலின் நான்காவது பாகம், உலகளாவிய மீட்பாகிய போதனைக்கு வக்காலத்து வாங்குபவர்களுக்கு எதிரானது. இந்தப் போதனைக்கு சார்பாக இருப்பதாகக் கருதப்படும் ஒவ்வொரு வேத வசனத்தையும் ஓவன் தன்னுடைய இறையியல் திறமையைப் பயன்படுத்தி அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்து ஆராய்ந்து விளக்கியிருக்கிறார். இந்த வசனங்களை விளங்கிக்கொள்ள முடியாமல் திணறியிருக்கும் பிரசங்கிகளும், கிறிஸ்தவர்களும் ஓவன் தந்துள்ள தெளிவான விளக்கங்களைக் கவனமாகப் படிப்பார்களானால் அவர்களுக்குப் பெரும் பயன் உண்டாகும். ஓவனுக்குப் பின் வந்தவர்களில் பலர் இந்த வசனங்களுக்கு விளக்கங்கொடுத்திருந்த போதும், ஓவனின் திறமையான தெளிவான விளக்கங்கள் அவர்கள் அனைவருடைய விளக்கங்களுக்கும் முன்னோடியாக இருக்கின்றன. வேத வசனங்களை அவை அமைந்திருக்கும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, வசனங்களை வசனங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்து விளக்கந்தரும் அருமையான நூலாக இருக்கிறது ஓவனின் படைப்பு. தொமஸ் மூரின் வாதங்களை ஓவன் மிகத்திறமையாக வாதாடித் தன்னூலில் தகர்த்தெறிந்திருக்கிறார்.

இந்தப் பாகத்தின் கடைசி அதிகாரத்தில் ஓவன், உலகளாவிய மீட்பாகிய போதனைக்கு சார்பான இறையியல் விளக்கத்தை நிராகரித்து, குறிப்பிட்டவர்களுக்கான கிறிஸ்துவின் மீட்பை

வலியுறுத்தியுள்ளார். இருந்தபோதும் குறிப்பிட்டவர்களுக்கான மீட்பு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டிய தனி மனிதனின் பொறுப்பை நிராகரிக்கவில்லை என்றும், அது விசுவாசத்திற்கு எதிரானதல்லவென்றும், கிறிஸ்துவின் பணியையும், கர்த்தரின் இலவசமான கிருபையையும் அது மகிமைப்படுத்துகிறது என்றும், அது மட்டுமே மெய்யான சுவிசேஷத்தின் சகல ஆறுதல்களுக்கும், நிச்சயத்துவத்துக்கும் அடிப்படையானது என்றும் விளக்கியிருக்கிறார். அதேவேளை உலகளாவிய மீட்பாகிய போதனைக்கு சார்பானவர்கள் மனிதனின் கடமைப் பொறுப்பைத் தவறாக விளங்கிக் கொண்டிருப்பதோடு, விசுவாசத்தை அசிங்கப்படுத்தி அதையே கிறிஸ்தவ நிச்சயமாக (Assurance) தவறாகக் கணக்குப் போட்டு, கிறிஸ்துவின் இலவசமான கிருபையை சாதாரணமானதாக்கி கிறிஸ்துவின் மீட்புப்பணியையும் களங்கப்படுத்துகிறார்கள். அத்தோடு நிலைதடுமாறும், மாறுபாடுள்ள, தெளிவற்ற ஆறுதல்களையும், நிச்சயத்தையும் அவர்கள் ஆத்துமாக்களுக்கு வழங்குகிறார்கள்.

உண்மையில் கிறிஸ்துவின் சிலுவை மரணம் பெற்றுத்தந்துள்ள சகல நல்ல பலன்களும் கர்த்தரின் சித்தத்தின்படியும், திட்டத்தின்படியும் கிறிஸ்து மரித்த அத்தனை ஆத்துமாக்களுக்கும் எந்தவிதமான வேறுபாடுமின்றி வழங்கப்படுகின்றது. இதுவே நற்செய்தியாகும். உலகத்தோற்றத்திற்கு முன்பாகத் தான் அன்புகூர்ந்து நேசித்த மக்களுக்காக திட்டமிட்டு நிறைவேற்றிய இரட்சிப்பைத் திட்ப உறுதியோடு அவர்களுக்கு வழங்கும் இறையாண்மையுள்ள கர்த்தரின் நற்செய்தியே இது. இதுவே முழுமையானதும், இலவசமானதுமான இரட்சிப்பு. இதுபற்றி ஜிம் பெக்கர் ஓவனின் நூலுக்கான தன்னுடைய முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்:

> "கல்வினிசத்தின் இரட்சிப்புப் பற்றிய போதனையை விளக்கவேண்டுமானால் அதை ஒரே வார்த்தையில் விளக்கி விடலாம். அதாவது, கர்த்தர் பாவிகளை இரட்சிக்கிறார் என்பதே அப்போதனை. இதில் கர்த்தரைப் பற்றி கல்வினிசம் போதிப்பதென்ன? பிதா, குமாரன், ஆவியானவராக இருக்கின்ற கர்த்தர் இறையாண்மை யுடனும், ஞானத்துடனும், அன்புடனும் தெரிந்துகொள்ளப் பட்ட மக்களின் இரட்சிப்புக்காக உழைக்கிறார். இதில் பிதா தெரிந்துகொள்கிறார்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களின்

மீட்புக்கான பணியைக் குமாரன் செய்கிறார்; பிதாவினதும், குமாரனதும் நோக்கங்களின்படி ஆவியானவர் ஆத்துமாக்களைப் புதுரூபமாக்குகிறார். இதுவே கல்வினிசத்தின் கர்த்தத்துவம். இரட்சிப்பைப் பற்றி கல்வினிசம் போதிப்பதென்ன? பாவிகளை மரணத்திலிருந்து விடுவித்து மகிமைக்குக்கொண்டுவருவதற்கான அனைத்தையும் ஆரம்பம் முதல் முடிவுவரையும் கர்த்தரே செய்கிறார். அவரே இரட்சிப்புக்கான திட்டமிடுகிறார்; மீட்பை நிறைவேற்றி அதைப் பாவிகளுக்கு அளிக்கிறார்; அவர்களை அழைத்துப் பாதுகாக்கிறார்; நீதிமான்களாக்குகிறார்; பரிசுத்தமாக்குகிறார்; மகிமைப்படுத்துகிறார். இதுவே இரட்சிப்புப் பற்றிய அதன் போதனை.

பாவிகளைப் பற்றிய அதன் போதனை என்ன? கர்த்தரின் பார்வையில் அவர்கள் குற்றவாளிகளாகவும், உதவியற்றவர்களாகவும், வல்லமையற்றவர்களாகவும், குருடர்களாகவும், கர்த்தருடைய சித்தத்தை எந்த விதத்திலும் நிறைவேற்றும் தகுதியற்றவர்களாகவும், தங்களுடைய இருளடைந்த ஆத்மீக வாழ்க்கையைப் புதுப்பித்துக்கொள்ள வழியற்றவர்களாகவும் இருக்கின்றனர். கர்த்தர் பாவிகளை இரட்சிக்கிறார் என்ற இந்தப் போதனையை எந்தவிதத்திலும் நாம் பலவீனப்படுத்திவிடக்கூடாது. இது தொடர்பான திரித்துவ தேவனின் பணியைக் குறைவுபடுத்தியோ அல்லது இரட்சிப்பின் நிறைவேற்றத்துக்கான பணியைக் கர்த்தருக்கும் மனிதனுக்கும் இடையில் பங்குபோட்டு அதில் மனிதனின் பங்கை உயர்த்தியோ அல்லது மனிதனின் இயலாத்தன்மையைக் குறைத்துக்காட்டி அவன் தன்னுடைய இரட்சிப்பின் பெருமையை இரட்சகரான இயேசுவுடன் பகிர்ந்துகொள்ளும்படிச் செய்வதோ பெருந்தவறு. பாவிகள் தங்களை ஒருபோதும் எந்தவிதத்திலும் இரட்சித்துக்கொள்ள முடியாது, இரட்சிப்பின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் அத்தனையும் ஆரம்பம் முதல் முடிவுவரை பூரணமாக கர்த்தருக்கே சொந்தமானது. அதில் அவருக்கே சகல மகிமையும் சேர வேண்டும். ஆமென்! நாம் இதுவரை விளக்கிய சத்தியத்தையே கல்வினிசம் தன்னுடைய

> ஐம்போதனைகளின் மூலம் ஆணித்தரமாக நிறுவ முயல்கிறது. அதேவேளை இதையே ஆர்மீனியனிசம் தகர்க்க முயல்கிறது. (J. I. Packer, Introduction to the Death of Death, 6).

ஆனால், நாம் இப்போது ஒரு பிரச்சனையை சந்திக்கிறோம். சுவிசேஷக் கிறிஸ்தவர்களான நாம் சந்திக்கும் இந்தப் பிரச்சனை நற்செய்தியைப் பற்றியது. அதாவது, இதுவரை நாம் பார்த்த சத்தியத்தின் அடிப்படையிலான நற்செய்தியைத்தான் நாம் பிரசங்கித்து வருகிறோமா? என்பதே அந்தப் பிரச்சனை. முதலில், இரண்டு கேள்விகளுக்கு நாம் நிச்சயம் பதிலளித்தாக வேண்டும். *(1)* நாம் இதுவரை பார்த்திருப்பவைகள் மெய்யானவையாக இருக்குமானால் அவற்றின்படி சுவிசேஷத்தை நான் பிரசங்கிக்கிறேனா? *(2)* இதுவரை நாம் பார்த்தவை சத்தியங்களானால், சுவிசேஷத்தை நான் எந்த முறையில் பிரசங்கிக்க வேண்டும்?

ஜோன் ஓவனின் நூலை வாசிக்கிறபோது சுவிசேஷத்தைப் பற்றிய நம்முடைய அறிவு குறைபாடுள்ளதாக இருப்பதை நாம் உணரும் நிலைக்கு தள்ளப்படுகிறோம். அதை நாம் அறிந்திருக்கிறோமோ இல்லையோ அதை உணரும்படி அவருடைய வார்த்தைகள் நம்மை உந்துவனவாக இருக்கின்றன. அடுத்த படியாக, சுவிசேஷத்தைப் பற்றிய நமது அறிவு வேதபூர்வமானதாக இருந்தாலும், அதை நாம் பிரசங்கிக்கும் முறை வேதபூர்வமானதாக இல்லை என்பதை உணரும் நிலைக்கும் தள்ளப்படுகிறோம். "நீங்கள் மறுபிறப்படைய வேண்டும்" என்று பிரசங்கிப்பது சுவிசேஷப் பிரசங்கமாகாது. ஒருவன் மறுபிறப்படைந்தேயாக வேண்டும் என்று பிரசங்கிப்பதும் கிறிஸ்துவின் நற்செய்தியல்ல. மறுபிறப்பு அல்ல நற்செய்தி; நற்செய்தியின் விளைவே மறுபிறப்பு. நற்செய்தியாகிய மரத்தில் முளைக்கும் கனியே மறுபிறப்பு. பவுல் 2 கொரிந்தியர் 5:19ல் பின்வறுமாறு நற்செய்தியை விளக்குகிறார், "கிறிஸ்துவின் மூலம் கர்த்தர் உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளுகிறார்." இரட்சிப்பைப் பெறுவதற்காக கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய மீட்பின் விளைவே நற்செய்தியாகும். இதைப்பற்றி விளக்கும் சின்கிளேயர் பேர்கசன் (Sinclair Ferguson), "கிறிஸ்து நமக்குள் இருப்பதோ அல்லது நாம் மறுப்பிறப்படைந்திருப்பதோ நமது நீதிமான்களாகுதலுக்கான அடிப்படை அல்ல". கிறிஸ்து நமக்காக மரித்திருப்பதே

நீதிமானாக்குதலின் அடித்தளமாகும். மார்டின் லூத்தர் இதுபற்றிக் கூறும்போது, "பூரணமாக நமக்கு வெளியில் இருந்து வருவதே நற்செய்தி" என்கிறார். இதை மேலும் விளக்கும் பேர்கசன்,

> "நமது பிரசங்கத்தில் நாம் ஒருபோதும் கிறிஸ்துவின் மீட்புப் பணியை கிறிஸ்துவில் இருந்து வேறுபடுத்திக்காட்டக் கூடாது. மீட்பு, நீதிமானாக்குதல், இரட்சிப்பு என்று நாம் பிரசங்கிப்பதை விட "மரித்திருக்கும் கிறிஸ்துவை" பிரசங்கிப்பது மேலானது. இரட்சிப்பின் பலன்களைக் கிறிஸ்துவே நிறைவேற்றித் தந்திருப்பதோடு அவர் மூலம் மட்டுமே அவற்றை நாம் அடையவும் முடியும். அவரில் இருந்து அவற்றைப் பிரிக்க முடியாது. கிறிஸ்துவால் நாமடையும் பலன்களை மட்டும் பிரசங்கித்துவிட்டு நற்செய்தியின் நாயகனான கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதைத் தவிர்த்துவிடும் நவீன பிரசங்க வியாதியைவிட்டு நாம் விலகியோட வேண்டும். நாம் கிறிஸ்துவை மையமாகக்கொண்டு அவர் செய்திருக்கும் பணியைப் பிரசங்கிக்கிறோம்; கிறிஸ்துவை விட்டுவிட்டு அவருடைய பணியை மட்டும் பிரசங்கிப்பதில்லை."

இது நம்முடைய இரண்டாவது கேள்விக்கு நம்மை அழைத்துச் செல்லுகிறது. பேர்கசன், "மரித்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நாம் பிரசங்கத்தின் மூலம் அனைவருக்கும் வழங்குகிறோம்" என்கிறார். அப்படியானால் அதை எவ்வாறு பிரசங்கிப்பது? இதை வாசிக்கிறபோது நாம் பிரசங்கித்துள்ள அல்லது நாம் கேட்டிருக்கிற பிரசங்கங்களை நோக்கி நம்முடைய மனம் அசைபோட ஆரம்பிக்கிறதல்லவா? அந்தப் பிரசங்கங்களில் ஆத்துமாக்களை உந்தி இழுப்பதற்கு நாமோ மற்றவர்களோ பயன்படுத்தியிருக்கிற சொற்பிரயோகங்களை சிந்தித்துப் பார்ப்போம். அவ்வாறு சிந்தித்துப் பார்க்கிறபோது, நான் ஒரு ஆர்மீனியனா? அமிரெல்டியனா? என்னைக்குறித்தும் என்னுடைய பிரசங்கத்தைக் குறித்தும் நான் ஆத்துமாக்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறேனா? ஆத்துமாக்களுக்கு கொடுக்க அவசியமில்லாத எதையும் பிரசங்கத்தில் நான் கொடுத்திருக்கிறேனா? கிறிஸ்து தன்னுடைய மக்களுக்காக மரித்திருப்பதால் நான் எப்படி அவரை ஆத்துமாக்களுக்கு வழங்க முடியும்? அவர்கள் அவருடைய மக்களாக இல்லாமல் இருந்துவிட்டால் என்ன செய்வது? கர்த்தரின் இலவசமான

கிருபையின் நற்செய்தியை சிதைத்துவிடுகிற ஆபத்தேற்படும் என்பதால் கிறிஸ்துவை ஆத்துமாக்களுக்கு நான் வழங்காமல் இருப்பது என்னை ஹைப்பர் கல்வினிஸ்டாக (Hyper Clavinist) மாற்றிவிடுமா? ஏனைய பிரசங்கிகளும், நானும் "கர்த்தரோடு ஒப்புரவாகுங்கள்" என்று கர்த்தரே நம்மூலம் வருந்தி அழைப்பது போல் ஆத்துமாக்களுக்கு பிரசங்கிப்பது எப்படி? கர்த்தருடைய மக்களின் மீட்பு நடக்கக்கூடிய ஒன்றாக இல்லாமல் நிச்சயமாக நிகழ்ந்து, நிறைவேறி, கொடுக்கப்பட்டு வருகிறதாக இருக்குமானால், கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி ஆத்துமாக்களை நான் அழைப்பதெப்படி? இதற்கெல்லாம் பதில் தேவை. அதை இனிப் பார்ப்போம்.

ஆர்மீனியன்களும் அவர்களுடைய நண்பர்களுமே கிறிஸ்துவை முடமாக்கி நற்செய்தியாகிய மரத்தை சேதப்படுத்திவிட்டிருக்கிறார்கள். அவர்கள் செத்த பிணங்களுக்கு முன் நம்பிக்கையாகிய சட்டியை நீட்டி அதில் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி அவர்களை வற்புறுத்துகிறார்கள். கிறிஸ்து தன் பணியை அரைகுறையாக விட்டிருக்கிறார் என்ற எண்ணத்தில் அதைப் பூரணமாக்க செத்த பிணங்களை ஏவிவிடுகிறார்கள். பிணங்களை விசுவாசிக்க வைக்க ஆர்மீனியன் போதனையாளர் செய்யும் செயலே இது. அவர்களுடைய செயல் எந்தமாதிரியான இரட்சிப்பை ஆத்துமாக்களுக்கு வழங்கப்போகிறது?

நல்லவர்களாகவோ, கெட்டவர்களாகவோ உலகத்தின் பார்வையில் எந்த நிலைமையிலிருந்தாலும் இல்லாவிட்டாலும் கர்த்தருடைய மக்களெல்லோரையும் இரட்சிப்பதற்காகவே கிறிஸ்து மரித்தார் என்றும், அவர் தன்னுடைய பணியில் ஒருபோதும் தவறுவதில்லை என்பதிலும் கல்வினிசப் போதனையாளர்கள் உறுதியான வேதநம்பிக்கையைக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையுடனேயே அவர்கள் நற்செய்தியைப் பிரசங்கிக்கிறார்கள். கர்த்தருடைய மகிமையுள்ள குமாரனால் நிறைவேற்றப்பட்ட குறிப்பிட்டவர்களுக்கான மீட்பே நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்கு நமக்குள்ள சுதந்திரத்தின் அடித்தளமாகும்.

முடிவற்ற மகிமையுள்ள கிறிஸ்துவின் சிலுவைப் பலியை அடித்தளமாகக் கொண்டே எல்லா மக்களுக்கும் நற்செய்தி பிரசங்கிக்கப்பட வேண்டும் என்பது ஜோன் ஓவனின் அசைக்க முடியாத கருத்து. "இரட்சிப்பிற்காக நற்செய்தி காட்டும் இந்த வழி எல்லாரும் அதில் நடந்துபோவதற்கு வசதியாக

இருக்கின்றது" என்கிறார் ஓவன். கர்த்தருக்குரியவைகளை அறிந்திராத பிரசங்கிகள் (அதை அறிந்துகொள்ள முயல்வது அவர்களுடைய பணியல்ல), "கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி சகல மனிதரையும் அழைக்க வேண்டியது அவசியம். ஏனெனில், கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒவ்வொருவரையும் கரைசேர்க்கும் வல்லமை கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் அடங்கியிருக்கிறது. யார் யாருக்கு கர்த்தர் விசுவாசத்தைக் கொடுப்பார், எவரெவருக்காக கிறிஸ்து மரித்தார் என்பதுபோன்ற கர்த்தரின் ஆலோசனைகளையெல்லாம் ஒருபுறம் வைத்து விட்டு இதைச் செய்வதே பிரசங்கிகளின் பணி" என்கிறார் ஓவன்.

கர்த்தருடைய திட்டத்திற்கும் (God's plan of slavation) மனிதனுடைய கடமைக்கும் (Man's responsibility) இடையில் இருக்கும் வேறுபாட்டை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ளுவது அவசியம். நற்செய்தியைப் பிரசங்கிப்பதே நம்முடைய கடமை. கர்த்தர் தன்னுடைய மகிமையுள்ள நோக்கங்களைத் தான் நியமித்துள்ள கருவிகளைக் கொண்டு தகுந்த நேரத்தில் நிறைவேற்றிக்கொள்ளுவார் என்பதை மனதில் கொண்டு நாம் நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டும். ஜோன் ஓவனின் பின்வரும் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> "ஏற்கனவே நாம், கிறிஸ்துவின் பரிகாரப்பலியைப் பற்றிப் பிரசங்கிப்பது கிறிஸ்துவின் மரணத்தைப் பிரசங்கிப்பதாகும் என்று பார்த்திருக்கிறோம். இன்னும் சொல்லப் போனால் அவரே சிலுவையைப் பற்றிய செய்தியாக இருக்கிறார். கல்வின் இதுபற்றி அருமையாக பின்வருமாறு சொல்லுகிறார்: 'பிதாவினால் அளிக்கப்பட்டு தன்னைப் பற்றிய செய்தியைத் தாங்கிவரும் கிறிஸ்துவை நாம் பிரசங்கிக்கிறோம்'. வெறுமனே கிறிஸ்துவினுடைய பணியை மட்டும் நாம் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு அளிப்பதில்லை; எபிரெயர் 7:25ன்படி 'தேவனிடத்தில் சேருகிறவர்களை . . . முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிற' இரட்சகரான கிறிஸ்துவை நாம் எல்லோருக்கும் வழங்குகிறோம். கிறிஸ்து தரும் பலன்களை மட்டும் பிரசங்கிக்காமல் கிறிஸ்துவையே இரட்சகராகப் பிரசங்கிப்பதே நற்செய்திப் பிரசங்கம் என்பதை நாம் விளங்கிக்கொள்ளும்போது சுதந்திரமாக நம்மால் சுவிசேஷப் பிரசங்கத்தை செய்யமுடிவதோடு, தெரிந்து கொள்ளப்பட்டவர்களைப் போலவே தெரிந்து கொள்ளப்படாதவர்களும் கிறிஸ்துவை விசுவாசிக்கும் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம்.
>
> பவுலினுடையதும், அப்போஸ்தலர்களுடையதும், சீர்திருத்தவாதத்தினுடையதும், விசுவாச அறிக்கைகளுடையதுமான பரிகாரப்பலி பற்றிய இந்த விளக்கமே நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்கான நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது. இதன் மூலமே பிதாவினால் உலகத் தோற்றத்துக்கு முன்பாக தெரிந்துகொள்ளப்பட்டு கிறிஸ்துவிடம் ஒப்படைக்கப்பட்டு, தகுந்த காலத்தில் கிறிஸ்துவின் இரத்தப்பலி மூலம் பெறப்பட்ட மீட்புக்கு உரித்தானவர்கள் தேவனுடைய இராஜ்யத்துக்குள்ளாக கொண்டுவரப்படுகிறார்கள்."

ஜோன் ஓவனுடைய இந்த விளக்கத்தை அங்கீகரித்து அவருக்குப் பின்பு வந்த இறையியலறிஞர் ஜோன் மரே பின்வருமாறு விளக்குகிறார்:

> "இரட்சிப்பை அடைந்தாலும் அடையலாம், அடையாமலும் போகலாம் என்றில்லாமல் பூரணமான இரட்சிப்பையும் இரட்சகரையும் பாவிகளுக்கு நாம் வழங்குகிறோம். நாம் வழங்குகிற இரட்சிப்பில் குறைபாடுகளோ, அதை அடைவதற்கான எந்தத் தடைகளோ இல்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்ற நம்பிக்கையுடனோ அல்லது கர்த்தரின் அன்பை ருசி பார்ப்பதற்கு தகுதியுள்ளவர்கள் என்ற நம்பிக்கையுடனோ நாம் கர்த்தரிடம் ஒருபோதும் வருவதில்லை; பாவிகளாக மட்டுமே அவரிடம் வருகிறோம். அதுவே மெய்யான விசுவாசத்திற்கு அடையாளமாக இருக்கிறது."

கிறிஸ்துவின் மகிமையைப் பற்றி எழுதியுள்ள ஜோன் ஓவன் அதன் முடிவில் கிறிஸ்துவை அறியாதவர்களை கிறிஸ்துவிடம் வருமாறு பின்வருமாறு அழைக்கிறார்:

> "கிருபையையும், நித்திய ஜீவனையும், சமாதானத்தையும், விடுதலையையும் பெற்றுக்கொள்ள உங்களைத் தன்னிடம் வருமாறு அழைக்கின்ற கிறிஸ்துவின் அழைப்பில்

அவருடைய அளவற்ற அன்பை நம்மால் பார்க்க முடிகிறது. இத்தகைய அழைப்புகள் வேதம் முழுவதும் பரவிக் காணப்படுகின்றன. பாவிகள் தற்போது இருக்கும் நிலையில் அவர்களுக்கு தேவையானது என்று கர்த்தர் ஞானத்தோடு கண்டிருக்கும் ஆசீர்வாதமான ஆறுதல்கள் அவருடைய அழைப்பில் நிரம்பிக் காணப்படுகின்றன. அவற்றை எண்ணிப் பார்ப்பதே நமக்கு அதிக ஆசீர்வாதத்தைக் கொடுக்கும். . . . இவற்றைப் பிரசங்கத்தின் மூலம் பாவிகளுக்கு நாம் வழங்கும்போது இயேசு கிறிஸ்துவே பாவிகள் முன் நின்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி அழைக்கிறார்."

ஆகவே, கிறிஸ்துவின் கிருபையையும், அன்பையும் எண்ணிப் பாருங்கள். அவருக்கு உங்கள் உதவி அவசியமாக இருக்கிறதா? நீங்களா அவரை முதலில் நேசித்தீர்கள்? நீங்கள் இல்லாமல் அவரால் அன்போடும், சமாதானத்தோடும் இருக்க முடியாதா என்ன? உங்களை இவ்வளவு தூரம் அவர் வற்புறுத்தி அழைப்பதால் அவருக்கு என்ன நன்மை இருக்கிறது? அருவிபோல் பாய்ந்தோடும் அவருடைய அன்பும், கிருபையும், கருணையுமே அவரை இந்தளவுக்கு உங்களை அழைக்கும்படி செய்கிறது.

இதுவே மெய்யான அழைப்பு. கிறிஸ்துவிடம் வந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி பாவிகளை அழைக்கும் நேர்மையான, உளமார்ந்த, உணர்ச்சிப்பூர்வமான அழைப்பு. இன்னொரு விசுவாசமிக்க சேவகனும், பிரசங்கியுமான சார்ள்ஸ் ஸ்பர்ஜன் சொல்லுவதைக் கவனியுங்கள்:

"நான் ஆசைப்படுகிற அளவுக்கு என்னால் உங்களை வருந்தி அழைக்க முடியவில்லை. என்னால் முடியுமானால் நான் என் கண்கள் மூலமும், இதழ்கள் மூலமும், இருதயத்தாலும் உங்களைக் கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்வேன். நான் ஒரு ஆர்மீனியனைப் போலப் பேசுகிறேனே என்று நீங்கள் என்னைப் பார்த்துக் கூப்பாடு போட வேண்டிய அவசியமில்லை. உங்களுடைய எண்ணங்களைப் பற்றி எனக்கு எந்தக் கவலையுமில்லை; இதுவே வேதத்தில் நான் பார்க்கிற அழைப்பு. கர்த்தரே எங்கள் மூலம் உங்களை அழைப்பது போல், உங்களுக்காக நாங்கள் கிறிஸ்துவின் இடத்தில் இருந்து ஜெபத்தோடு, கிறிஸ்துவோடு ஒப்புரவாகுங்கள் என்று அழைக்கிறோம். நொருங்கின இருதயத்தோடு இருக்கும் பாவியே! கர்த்தரே இந்தக் காலை நேரத்தில், தானே இந்த இடத்தில் இருப்பதுபோல் தன்னோடு ஒப்புரவாகும்படி உன்னோடு பேசுகிறார். குள்ளமானவனும், பார்வைக்கு ஒன்றும் பெரிதாகத் தெரியாதவனுமாகிய என் மூலமாக அவர் பேசினாலும், தேவதூதர்களே உன் முன் நின்று பேசுவதுபோல் அவர் பேசுகிறார். கர்த்தரோடு ஒப்புரவாகு! வா! நண்பா, உன்னுடைய கண்களையும், முகத்தையும் என்னைவிட்டுத் திருப்பிக்கொள்ளாதே. உன்னுடைய கரங்களையும் இருதயத்தையும் என்னிடம் கொடு. உன்னுடைய இருதயம் அழிந்து போகாமல் இருப்பதற்காகவும், கர்த்தர் உனக்கு கருணை காட்டும்படியும், நான் ஜெபிக்கிறேன். நீ கிறிஸ்துவுக்கு எதிரியாக இருக்கிறாய் என்று அவர் உனக்கு உணர்த்தி இருப்பதால், கிறிஸ்துவுக்கு உடனடியாக நண்பனாகிவிடு. நினைவில் வைத்துக்கொள், இப்போது நீ பாவத்தை உணர்ந்து மனந்திரும்புவாயானால் உனக்கு தண்டனை கிடைக்காது. உனக்காக அவர் தண்டனையை ஏற்றுக்கொண்டிருக்கிறார். நீ இதை நம்புவாயா? இதை நீ விசுவாசித்து கர்த்தரோடு சமாதானத்தை அனுபவிப்பாயா?

நீ, இதற்கு மறுப்புக் கூறுவாயானால், உனக்குக் கிடைக்கவிருந்த கிருபையை நீ உதறிப் போட்டுவிட்டாய் என்பதை உனக்கு சொல்ல விரும்புகிறேன். "நான் ஒப்புரவாவதற்கு அவசியமில்லை" என்று நீ சொல்வாயானால் உனக்கிருந்த ஒரே நம்பிக்கையை நீ தூக்கி எறிந்து விடுகிறாய். உன்னுடைய இரத்தப்பழி எனக்கு வேண்டாம்; உனக்கு நீயே ஆபத்தை விளைவித்துக் கொள்கிறாய். கொஞ்சம் பொறு, கிறிஸ்து உனக்குத் தேவை என்பதை நீ உணர்வாயானால், நரகமாகிய பாதாளத்தில் இருந்து நீ தப்பி பரிசுத்தமானவர்களோடு வாழ்வாய். நியாயத்தீர்ப்பு நாளில் உன்னைக் குற்றஞ் சாட்டப்போகும் அவருடைய பெயரில் நான் மன்றாடுகிறேன், கிறிஸ்துவிடம் ஒப்புரவாகிவிடு. இந்தப் பிரசங்கத்தை முடித்தபிறகு நான் மறுபடியும் கர்த்தரின் நியாயஸ்தலத்துக்கு போகப் போகிறேன். அங்கே

உன்னைப் பற்றி நான் எதைக் கூறுவது? நீ தொடர்ந்து கர்த்தருக்கு எதிரியாகவே இருக்கத் தீர்மானித்திருக்கிறாய் என்று என் ஆண்டவரிடம் நான் சொல்வதா? அல்லது, 'அவர்கள் நான் பேசியதைக் கேட்டார்கள், ஆனால், அதை அசட்டை செய்துவிட்டார்கள் என்றும், அவர்கள் தங்களுடைய இருதயத்தில், இப்படியே இருந்துவிடப் போகிறோம், கர்த்தருக்குப் பயந்து வாழமாட்டோம் என்று சொன்னார்கள் என்றும் சொல்வதா?' கர்த்தரிடம் இதைப் போய் நான் சொல்லவா? இந்த பயங்கரமான செய்தியை நான் கர்த்தரிடம் போய் சொல்ல வேண்டுமென்பதா உங்கள் விருப்பம்? இந்தச் செய்தியோடு என் ஆண்டவரிடம் என்னைத் திரும்ப அனுப்பாதீர்கள், அவர் கோபத்தில், 'நான் வாக்குத்தத்தமளித்த நித்திய ஓய்வை நிராகரித்தவர்களுக்கு அது ஒருபோதும் கிடைக்காது' என்று சொல்லிவிடுவார்."

இறையாண்மையுள்ள கர்த்தரின் இரட்சிப்புக்குரிய நோக்கங்களில் உறுதியான நம்பிக்கை வைத்த அதேவேளை கிறிஸ்துவிடம் வந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று உணர்ச்சியோடு பிரசங்கித்தார்கள் ஸ்பர்ஜனும், ஓவனும். அவர்களால் எவ்வாறு இப்படிப் பிரசங்கிக்க முடிந்தது? கிறிஸ்து தம்முடைய மக்களுக்காக மரித்தார் என்றும், அவர் தம்முடைய இரத்தத்தின் மூலம் தம்முடைய மக்களின் பாவங்களைக் கழுவி அவர்களைத் தவறாது இரட்சிப்பார் என்றும், அவர்களைத் தன்னுடைய வார்த்தையின் மூலம் அழைத்துக் கொள்ளுவார் என்றும் அவர்கள் ஆணித்தரமாக நம்பியதால்தான் அவர்களால் இப்படிப் பிரசங்கிக்க முடிந்தது.

இவர்கள் பிரசங்கித்த இந்த சுவிசேஷத்தை நாம் புரிந்துகொண்டிருக்கிறோமா? அப்படியானால் அதை நாம் விசுவாசத்தோடு பிரசங்கிக்கிறோமா? பாவிகள் கிறிஸ்துவை விசுவாசிக்க கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்ட மரணபலியைவிட வேறு எதுவும் தேவையில்லை. பாவிகளுக்காக தன்னுடைய ஒரே குமாரனைப் பலிகொடுத்ததன் மூலம் கர்த்தர் தன்னுடைய இலவசமான கிருபையின் மகிமையை உலகத்துக்குக் காட்டியிருக்கிறார். அதைவிடப் பெரிது ஒன்றும் இல்லை. உலகத்தோற்றத்துக்கு முன்பாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மீது தான் காட்டியிருந்த அன்பைத் தன்னுடைய குமாரனை

சிலுவையில் அவர்களுக்காகப் பலிகொடுத்ததன் மூலம் கர்த்தர் காட்டியிருப்பதைப் போன்ற மகிமையான காரியம் வேறொன்றில்லை. நம்முடைய பாவங்கள் கிறிஸ்துவின் மீட்பின் மூலம் மன்னிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்துகொள்ளுவதை விடப்பெரிய ஆனந்தம் வேறொன்றில்லை. கர்த்தருடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியின் மூலமாகவும் உணர்த்தப்பட்டு கிறிஸ்துவிடம் சரணடைந்து விடுகிறவர்களிலேயே மெய்யான நிச்சயம் அதிகமாக வளர்கிறது.

மனிதர்களைக் கிறிஸ்துவிடம் வரும்படிச் செய்யும் வல்லமை நம்மிடம் இல்லை. இருந்தாலும் மனிதர்கள் கிறிஸ்துவிடம் வரும்படிச் செய்ய வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது. "உங்களுடைய இருதயத்தைத் திறந்து வையுங்கள்" என்றோ அல்லது "உங்களுடைய இருதயத்துக்குள் வரும்படி அவரை அழையுங்கள்" என்றோ நாம் மனிதர்களைப் பார்த்து சொல்லக்கூடாது. அப்படிச் செய்வது சுவிசேஷத்தையே குழி தோன்றிப் புதைப்பதுபோலாகும். அதைவிட, நாம் பாவிகளைப் பார்த்து மன்றாட வேண்டும். ஒருபுறம் கர்த்தர் தன்னுடைய வார்த்தையின் மூலமும் பரிசுத்த ஆவியானவரின் மூலமும் கிறிஸ்துவின் செயல்களை அவர்களில் பதியும்படிச் செய்யுமாறு அவர்களுக்காக ஜெபிப்பதோடு, மறுபுறம் கிறிஸ்துவின் பூரணமான மீட்புப்பணி அவர்களைக் கரைசேர்க்கப் போதுமானது என்ற தளராத நம்பிக்கையுடன் தங்களுடைய பாவநிவாரணத்துக்காக கிறிஸ்துவிடம் வருமாறு அவர்களைப் பார்த்து நாம் அறைகூவலிட வேண்டும்.

எல்லா மனிதர்களும் தங்களை இரட்சித்துக்கொள்ளுவதற்கான வசதியை மட்டும் செய்து தருவதற்காக கிறிஸ்து கல்வாரியில் மரிக்கவில்லை. கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இரட்சிப்பை அடைவதற்கான ஒரு வழியை மட்டும் ஏற்படுத்தவும் அவர் சிலுவையில் மரிக்கவில்லை. கர்த்தருடைய மக்கள் அவர்களுடைய பாவங்களில் இருந்து விடுதலை பெறுவதற்காகத் தன்னைப் பலியாகச் செலுத்தி கிறிஸ்து சிலுவையில் மரித்து அவர்களுக்கான இரட்சிப்பைப் பூரணமாக நிறைவேற்றினார். இதுவே வேதம் போதிக்கும் கிறிஸ்துவின் மீட்புப்பணி; இதுவே நாமறிவிக்க வேண்டிய சுவிசேஷம். அவருக்கே சகல மகிமையும் சேரட்டும்.